உ

சிவமயம்



(யாழ்ப்பாணம் தொல்புரத்தை பிறப்பிடமாகவும் "யாமா வளவு" தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் தற்போது டென்மார்க்கில் வாழ்ந்தவருமாகிய )

# அமரர் அப்பாத்துரை செல்வராஜன்

அவர்கள்

சிவபதப்பேறு எய்தியமை குறித்த

# செல்வதீபம்

07-04-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராசவல்லப முதலியார் பரம்பரை
வழித்தோன்றலும்,
அமரர் செல்லப்பாவின் பேரனும்
அமரர்களான அப்பாத்துரை ஈஸ்வரி தம்பதிகளின்
சிரேஸ்டபுதல்வனுமாகிய

# அப்பாத்துரை செல்வராஜன்

**(முன்னாள் நில அளவையாளர்)**

**அவர்கள் சிவபதப்பேறு எய்தியமை குறித்த**

**செல்வ தீபம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இகவாழ்வில் தனது பல்வகைத் திறமையினை வெளிக்காட்டி எமது குடும்பத்தாரையும் சுற்றத்தாரையும் அன்புடன் அரவணைத்து அளப்பரிய சரீர, இதர பல உதவிகள் செய்து எந்நேரமும் ஒரு சிறு புன்னகை தவழும் இன்முகத்துடன் நல்வழிகாட்டியாக எமக்கெல்லாம் கலங்கரை விளக்காக ஒளிர்ந்தவர் எமது அப்பா. எம்மையெல்லாம் தவிக்கவிட்டு மீளாத்துயிலில் ஆழ்ந்த எமது குடும்பத் தலைவர் "செல்வ" செம்மலின் பண்புக்காக நேர்மைக்காக உழைப்பிற்காக நாமும் அக்கடின வழியை இயலுமானவரை பின்பற்றக் கடமைப்பட்டுள்ளோம். அவர் விருப்பை நிறைவு செய்து அவரை மேலும் மேன்மைப்படுத்துவோம். எமது குடும்பத் தலைவரின் நினைவுக்காக பொன்னை வைக்குமிடத்தில் பூவை வைப்பது போல் இச் "செல்வ தீபத்தினை" அவர் தாள் சமர்ப்பிக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

"யாமா வளவு",
தெல்லிப்பளை
மனைவி, பிள்ளைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வையத்துள் வாழ்வாங்குவாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்



மண்ணில் செல்வமாக

21.09.1942

விண்ணில் தெய்வமாக

02.03.2012

# அமரர்

# திரு.அப்பாத்துரை செல்வராஜன்

## திதி வெண்பா

ஏற்றமிகு கரவருடம் மாசிநாள் பத்தொன்பது
தேற்றிவரும் வளர்பிறை நவமியாம் - திதியில்
ஆற்றல்மிகு செல்வராஜனை சிவன் அழைத்தான்
போற்றுமுயர் பொற்கழற்கோம் சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பன்னிரு திருமுறைகள்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரங்கள்

### முதலாம் திருமுறை

**தலம் : திருநல்லூர் பண் : குறிஞ்சி**

திருச்சிற்றம்பலம்

வண்ண மலரானும் வைய மளந்தானும்
நண்ண லரியானை நல்லூர்ப் பெருமானைத்
தண்ண மலர்தூவித் தாள்கள் தொழுதேத்த
எண்ணு மடியார்கட் கில்லை யிடுக்கணே

**தலம் : திருத்தூங்கானை மாடம் பண் : பழந்தக்கராகம்.**

ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை
யுடைத்தாய வாழ்க்கை யொழித் தவம்
அடங்கும் இடங்கருதி நின்றீரெல்லா
மடிக அடிநிழற்கீழ் ஆளாம் வண்ணம்
கிடங்கும் மதிலுஞ்சு லாவியெங்குங்
கெழுமனைகள் தோறும்ம றையினொலி
தொடங்குங் கடந்தைத்த டங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழு மின்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டாம் திருமுறை**

**தலம் : திருவாலவாய்** **பண் : காந்தாரம்**

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் நீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவாலவாயன் திருநீறே

**தலம் : பொது** **பண் : பியந்தைக் காந்தாரம்**

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய் வமான பலவும்
அருநெதி நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் திருமுறை

**தலம்: திருகோணமலை** **பண் : புறநீர்மை**

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின்ற கலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

**தலம் : திருநல்லூர்ப் பெருமணம்**

**பண் : அந்தாளிக்குறிஞ்சி**

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த தேவாரங்கள்

## நாலாம் திருமுறை

**தலம் : திருப்பாதிரிப் புலியூர் திருவிருத்தம்**

விடையான் விரும்பியென் னுள்ளத் திருந்தான் இனிநமக்கிங்
கடையா வவல மருவினைசாரா நமனையஞ்சோம்
புடையார் கமலத்தயன் போல்பவர் பாதிரிப் புலியூர்
உடையா னடியாரடியடி யோங்கட் கரியதுண்டே.

**தலம் : திருவதிகை வீரட்டானம் பண் : கொல்லி**

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்இது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகிவந் தென்னை நலிவதனை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலுமென் னீரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் திருமுறை

**தலம் : திருவாரூர் திருக்குறுந்தொகை**

எந்தமா தவஞ் செய்தனை நெஞ்சமே
பந்தம்வீ டவையாய பராபரன்
அந்த மில்புகழா ரூரரனெறி
சிந்தையுள் ளுஞ்சிரத் துள்ளுந் தங்கவே.

**தலம் : பொது பாவநாசத்திருக்குறுந்தொகை**

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்குமரித் துறை யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீசன் எனதாவர்க் கில்லையே

## ஆறாம் திருமுறை

**தலம் : திருவாரூர் போற்றித்திருத்தாண்டகம்**

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனேநின் பாதம் போற்றி போற்றி
வெஞ்சடையோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதி யங்கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிரு ளாடலுகந் தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதி போற்றி
செஞ்சடை யாய்நின் பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலம் : திருப்புள்ளிருக்குர் வேளுர்**

**திருத்தாண்டகம்**

பேராயி ரம்பரவி வானோரேத்தும்
பெம்மானை பிரிவிலா வடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்தருள வல்லான் தன்னை
திரிபுரங் கள்தீயெழத் திண்சிலை கைக்கொண்ட
போரானை புள்ளிருக்கு வேளுரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கினேனே.

## சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த
## தேவாரங்கள்

### ஏழாம் திருமுறை

**தலம் : திருக்கேதீச்சரம் பண் : நட்டபாடை**

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலம் : திருவேகம்பம் பண் : தக்கேசி**

திங்க டங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்கவெண்குழை காதுடை யானை
சாமவேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி யேத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம்

## எட்டாம் திருமுறை

**தலம் : கோயில்**

**எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்**

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பெருந் துறையுறை சிவனே

இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்

இனியுனை யென்னிரக் கேனே.

**தலம் : திருப்பெருந்துறை**

**எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்**

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்

கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி

வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்

மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்கள் ஆர

வந்தெனை ஆட்கொண்டுள்ளே புகுந்த விச்சை

மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்

தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்

தனிச்சுடரே இரண்டுமிலித் தமிய னேற்கே.

## சேந்தனார் அருளிச்செய்த திருவிசைப்பா

### ஒன்பதாம் திருமுறை

**தலம் : திருவீழிமிழலை** **பண் : பஞ்சமம்**

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்

கரையிலாக் கருணைமா கடலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனை
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தனைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந் தனவே

## கருவூர்த்தேவர் அருளிச்செய்த திருவிசைப்பா

**தலம் : கங்கை கொண்ட சோளேச்சரம்**

**பண் : பஞ்சமம்**

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்கனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றுநான் மறக்கேன்
முன்னமா லறியா வொருவனா மிருவா
முக்கண்ணா நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே யமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டு

**தலம் : கோயில்** **பண் : பஞ்சமம்**

சொலாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன்
விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத வறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலதேவர் அருளிச்செய்த திருமந்திரம்

## பத்தாம் திருமுறை

### முதல் தந்திரம்

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

### ஏழாம்தந்திரம்

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே.

# சேரமான் பெருமான் நாயனார் அருளிச்செய்த பொன்வண்ணத்தந்தாதி

## பதினோராம் திருமுறை

சிந்தனை செய்ய மனம் அமைத் தேன்செப்ப நாஅமைத்தேன்
வந்தனை செய்யத் தலைஅமைத் தேன்கை தொழஅமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத் தேன்மெய் அரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி ஈசற்கிவையான் விதித்தனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைக்கால் அம்மையார் அருளிச்செய்த அற்புதத் திருவந்தாதி

ஒன்றே நினைத்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைத்தேன் - ஒன்றே காண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையற் காளாம் அது.

## சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த பெரியபுராணம்

### பன்னிரண்டாம் திருமுறை

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோக மாகுந்திருச் சிற்றம்பலத்துள்நின்று
பொற்புடன்நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள அளப்பரும்
கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருத்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த வெல்லையில்
தனிப்பெருங் கூத்தின்
வந்தபே இன்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியா ரெல்லாம்

### திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகப்பெருமான்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தல நிறைகனி யப்பமொடவல்பொரி
கப்பிய கரிமுக னடிவேணிக்
கற்றிடு மடியவர் புத்தியிலுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் முடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுடனச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கரைவி சித்ரமணி பொற்கலனை யிட்டநடை

பட்சியெனும் உக்ரதுர கமும்நீபப்

பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய

பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்

திக்குதும திக்கவரு குக்குடமும் ரட்சைதரு

சிற்றடியு முற்றியப னிருதோளும்

செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு

செப்பென எனக்கருள்கை மறவேனே

இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடன்நெய்

எட்பொரி அவற்றுவரை இளநீர்வண்

டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள

ரிப்பழம் இடிப்பல்வகை தனிமூலம்

மிக்கஅடி சிற்கடலை பட்சணம் எனக்கொள்ஒரு

விக்கிரு ஸமர்த்த எனும் அருளாழி

வெற்ப குடிலச் சடில விற்பரமர் அப்பரருள்

வித்தக மருப்புடைய பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகரகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன் னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந் தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும் மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழ் ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத்தான் எழுந்து அருளி
மாயப் பிறவி மயக்கம் அறுத்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்து என் உளந்தனில்புகுந்து
குருவடிவாகிக் குவயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருள் என
வாடா வகைதான் மகிழ்ந் தெனக்கு அருளிக்
கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புல்தன்னை அடக்கும் உபாயமும்
இன்புறு கருணையில் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலம் ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறி வித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி

மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்

நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனிற் கூடிய அசபை

விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து

மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்

காலால் எழுப்புங் கருத்தறி வித்தே

அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி

இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்

உடல் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்

சண்முக தூலமும் சதுர்முக சூக்குமமும்

எண்முக மாக இனிது எனக்கு அருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்

தெரியட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்

கருத்தினில் கபால வாயில் காட்டி

இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி

என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோபலம்
தேக்கியே என்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கும் ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்தி என் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடு மெயத்தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலை அறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்து எனை ஆண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்பிரமணியப் பெருமாள்

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணையாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி

அருவமு முருவு மாகி யனாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறும் கரங்கள்பன் னிரண்டும்
கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற வீராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி

## கந்தரனுபூதி

பேராசை எனும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா! முதுசூர் படவேல் எரியும்
சூரா! சுரலோக துரந்தனனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாதா! குமரா! நம!' என்று அரனார்
'ஓதாய்' என, ஓதியது எப்பொருள் தான்?
வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா! குறமின் பத சேகரனே!

குறியைக், குறியாது குறித்து அறியும்
நெறியைத் தனிவேளை நிகழ்த்திடலும்,
செறி அற்று, உலகோடு உரைசிந்தையும் அற்று
அறிவு அற்று, அறியாமையும் அற்றதுவே.

எம்தாயும், எனக்கு அருள் தந்தையும் நீ,
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்,
கந்தா! கதிர் வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே!

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்,
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தலரங்காரம்

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணைவடி வேலும் செங்கோடன் மயூரமுமே

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்முகில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோட னைச்சென்று கண்டுதொழ
நாலா யிரம்கண் படைத்திலனே அந்த நான்முகனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டா யுதமும் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாவந்த காவந்து பார்செற்றென் கைக்கெட்டவே.

ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருள்வாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே

திருப்புகழ்

நாத விந்துக் லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டிதசாமி நமோ நம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாகபந்தம யூரா நமோநம பரசூரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேத தண்டவி நோதா நமோநம

கீத கிண்கிணி பாதா நமோநம

தீத சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ

தீப மங்கள ஜோதீ நமோநம

தூய அம்பல லீலா நமோநம

தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்

ஈதலும் லும்பல கோலால பூஜையும்

ஓத லுங்குண ஆசார நீதியும்

ஈர முங்குரு சீரபாதா சேவையு மறவாத

ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை

சோழ மண்டல மீதே மனாகர

ராஜ கெம்பீர நாடாளு நாயக வயலூரா

பாதி மதிநதி போது மணிசடை

நாத ரருளிய குமரேசா

பாகு கனிமொழி மாது குறமகள்

பாதம் வருடிய மணவாளா

காது மொருவிழி காக முற அருள்

மாய னரிதிரு மருகோனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி லுறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே

கந்த புராணம்

சிவ சக்தி

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு வரனிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி யேத்துவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரி சவுந்தரி நிந்தரி துரந்தரி சோதியாய் நின்ற உமையே
சுக்கிர வாரத்திலுனைக் கண்டு தரிசித்தவர்கள் துன்பத்தை
நீக்கிவிடுவாய்.
சிந்தைதனி லுன்பாதம் தனையே தொழுபவர் துயரத்தை
மாற்றிடுவாய்
ஜெகமெலா முன்மாய்கை புகழ வென்னாலாமோ சிறியனால்
முடிந்திடாது
சொந்தவுன்மைந்தனா மெந்தனையிரட்சிக்கச் சிறிய
கடனுன்னதம்மா
சிவசிவ மகேசுவரி பரமனிடயீசுவரி சிரோன்மணி
மனோண்மணியும் நீ
அந்தரி துரந்தரி நிரந்தரி பரம்பரியனாத ரட்சகியும் நீயே
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடுமம்மை காமாட்சி
-யுமையே.

பத்துவிரல் மோதிரம் எத்தனை பிரகாசமது பாடகந் தண்டை
-கொலுசும்
பச்சை வைடூரியம் மிச்சையா யிழைத்திட்ட பாத
சிலம்பினொலியும்
முத்துமுக்குத்தியும் ரத்தினப் பதக்கமும் மோகன
மாலையழகும்
முழுவதும் வைடூரியம் புஷ்பராகத்தினால் முடிந்திட்ட
தாலியழகும்
சுத்தமாயிருக்கின்ற காதினிற் கம்மலுஞ் செங்கையிற் பொன்
-கங்கணமும்
ஜெகமெலாம் விலைபெற்ற முகமெலாம் பொலிவுற்ற சிறுகாது
கொப்பினழகும்
அத்திவரதன் தங்கை சக்தி சிவரூபத்தை யடியனாற்
சொல்லத்திறமோ
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடுமம்மை காமாட்சி
- யுமையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்கை

ஓரொட்டிதழ் வட்டத் துள்ளாய சட்கோணம்
பாரித்த முக்கோண வட்டப் பராபரையே
வாரிப் படுநஞ்சு அமுதாக்கிய வால்வளைக்கை
வேரிக் கரும்பே வித்தின்றி விளை மூலமே

ஆதியாய் அந்தத்தின் அந்தமாய் நின்றோர்க்கு
பாதியாய் ஒன்றாய் பலவாகிப் பல்லுயிராய்
பேதியாய் நின்றாய் பெருமாட்டி நின்பெருமை
சோதியாய் நின்றார்க்கு எளிதன்றே துல்லவமே.

தோன்று சராசரங்க ளெல்லாம் தொடர்விடா
தேற்ற சிவமயமும் நின்னன்றி இல்லையால்
ஆன்ற விருப்பின் அருந்துவன வின்றாமேல்
ஊன்று சுவையுளவோ நந்தா ஒளிவிளக்கே.

முச்செயலும் காட்டி அவைபுரக்கு மூவரைத்தான்
இச்சையிற் காட்டி அவருளத்தும் எட்டாதால்
பச்சை இளங்குதலை கிள்ளாய் பரையே நின்
இச்சை இவை என்றால் விடுத்துரை வல்லார் யார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதாதி பேதம்பிறந்த உயிர்த் தொகைக்கு
ஆதாரமாகி அளவை அறிந் தளித்தாய்
ஓதாமறை நூல் உபநிடதத் துன்மயமாம்
பாதார விந்தம் பெறப்பெற்றேன் பாதகனே.

## இலக்குமி

மூவுலகு மிடரியற்றும் அடல் அவுணன்
உயிரொழி முனிவு கூர்ந்த
பூவை யறள் திருமேனி மணிவண்ணன்
இதய மலர் வைகுமானே
தேவ ருலகினும் விளங்கு புகழ் கெல்லாபுரத்தினிது
இனிது சேர்ந்து வைகும்
பாவை யிருதாள் தொழுது பழமறைதேர்
குறுமுனிவன் பளிச்சு கின்றான்

கொழுதி இசையளி முரலும் தாமரைமென்
பொகுட்டிலுறை கொள்கை போல
மழை யுறளும் திருமேனி மணிவண்ணன்
இதயமலர் வைகு மானே
முழு துலகும் இனிதீன்ற அருட்கொம்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரகமல முகிழ்த் தெந்நாளும்
கழி பெரும் காதலற் தொழிவோர் வினைதீர
அருள் கொழிக்கும் கமலக் கண்ணாய்

கமலை திருமறு மார்பர் மனைக்கிழத்தி
செழுங் கமலக் கையாய் செய்ய
விமலை பசுங்கழை குழைக்கும் மேனியாய்
தனையீன்ற விந்தை தூய
அமுத கும்பமலர்க் கரத்தாய் பாற்கடலுள்
அவதரித்தோய் அன்பர் நெஞ்சத்
திமர மகன்றிட ஒளிரும் செழுஞ்சுடரே
எனவணக்கம் வணக்கம் செய்வாய் மன்னோ.

மடற்கமல நறும் பொகுட்டில் அரசிருக்கும்
செந்துவர் வாய்மயிலே மற்றுன்
கடைக் கண்அருள் படைத்தன்றோ மணிவண்ணன்
உலகமெலாம் காவல் பூண்டான்
படைத்தனன் நான்முகக் கிழவன் பசுங்குழவி
மதிபுனைந்த பரமன் தானும்
துடைத் தனன் நின்பெருஞ் சீர்த்தி எம்மனோரால்
எடுத்துச் சொல்லற் பாலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்ல நெடும் புவியனைத்தும் பொது நீக்கி
தனிபுரக்கும் மன்னர் யாரும்
கல்வி யினில் கட்ட ழகில்
நிகரிலாக் காட்சியோரும்
வெல் படையிற் பகைதுரந்து வெஞ்சமரில்
வாகைபுனை வீரர் தாமும்
அல்லி மலர்ப் பொகுட்குறையும் அணியிழை
நின் அருள் நோக்கம் அடைந்துளாரே.

செங்கமலப் பொலந் தாதிற் திகழ்ந் தொளிரும்
எழில் மேனித் திருவே வேலை
அங்கணுலகில் இருள் துரக்கும் அலர்க்
கதிராய் அமரர்க் கூட்டும்
பொங்கழலாய் உலகளிக்கும் பூங்கொடியே
நெடுங் கானில் பொருப்பில் மண்ணில்
எங்குஉனை நீ அவணன்றோ மல்லல் வளம்
சிறந்து ஓங்கி இருப்பதம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள், என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்

புத்தகம் படிக மாலை
குண்டிகை பொருள்சேர் ஞான
வித்தகம் தரித்த செய்கை
விடிமலையை அமலை தன்னை
மொய்த்தகொந் தளக பார
முகிழ்தலை தவள மேனி
மைத்தரு கருங்கட் செவ்வாய்
அணங்கினை வணங்கல் செய்வாம்

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடி கமழ் பூந்தாமரை போற்கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தாற்
கல்லும் சொல்லாதோ கவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்தது.

## சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதம்

தாங்களென் வெள்ளையுள்ளத்

தண்டா மரைக்குத் தாகாதுகொ

லோசக ஏழுமளித்(து)

உண்டான் உறங்க ஒழித்தான் பித்

தாகஉண் டாக்கும் வண்ணம்

கண்டான்சுவை கொள் கரும்பே

சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை

தோய்தர நாற்கவியும்

பாடும் பணியிற் பணித்தருள்

வாய்பங்க யாசனத்திற்

கூடும் பசும்பொற் கொடியே!

கனதனக் குன்றுமைப்பாற்

காடுஞ் சுமக்குங் கரும்பே!

சகல கலாவல்லியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்அமு (து)

ஆர்ந்துன் அருட்கடலில்

குளிக்கும் படிக்(கு) என்று கூடும்

கொலோ? உளங் கொண்டுதெள்ளித்

தெளிக்கும் பனுவற் புலவோர்

கவிமழை சிந்தக்கண்டு

களிக்குங் கலாப மயிலே!

சகல கலாவல்லியே!

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த

கல்வியும் சொற்சுவை தோய்

வாக்கும் பெருக பணித்தருள்

வாய்வட நூற்கடலும்

தேக்குஞ் செந்தமிழ்ச் செல்வமும்

தொண்டர்செந் நாவில்நின்று

காக்குங் கருணைக் கடலே!

சகல கலாவல்லியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சுஅப்பு இதம்தரு செய்யபொற்
பாதபங் கேருகம் என்
நெஞ்சத் தடத்(து) அல ராததுஎன்
னே? நெடுந் தாட்கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்
நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி(சு) ஒத்(து) இருந்தாய்!
சுகல கலாவல்லியே!

பண்ணும் பரதமுங் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுது(து)எளி(து) எய்தநல்
காய்எழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்!
சகல கலாவல்லியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும், பொருளால்
பொருந்தும் பயனும், என்பால்
கூட்டும்படி, நின் கடைகண் நல்
காய்உளங் கொண்டு தொண்டர்!
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ஓதிமப் பேடே!
சகல கலாவல்லியே!

சொல்விற் பனமும் அவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந்(து) அடிமைகொள்
வாய்நளி னாசனம்சேர்
செல்விக்(கு) அரி(து)என்(று) ஒருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றம்என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்? நிலம் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ(டு)
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பண்கண் டளவில் பணியச்செய்
வாய்ப்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம குலவு கவிதை
கூறும் பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவைக் இருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலுடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தட்சணாமூர்த்தி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
யிருந்தபடி யிருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்லா.

## திருமால்

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர்
ஆயின எல்லாம்
நிலம்தரும் செய்யும் நீள்விசும்பு அருளும் அருளோடு
பெருநிலம் அளிக்கும்
வலமதரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும்
ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லைதான் கண்டு கொண்டேன்
நாராயணா எனும் நாமம்

தாவி அன்று உலகம் எல்லாம்
தலைவிளாக் கொண்ட எய்தாய்
சேவியேன் உன்னை அல்லால்
சிக்கெனச் செங்கண் மாலே
ஆவியே அமுதே என்றன்
ஆருயிர் அனைய எந்தாய்
பாவியேன் உன்னை யல்லால்
பாவியேன் பாவியேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வைரவக் கடவுள்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

### வீரபத்திரக்கடவுள்

அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திரு சேவகன் சரணம் போற்றுவோம்.

### சண்டேசுரர்

அண்டர் பிரானும் தொண்டர் தமக்கு
அதிபனாக்கி அனைத்து நாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடுவனவும் உனக்காகச்
சண்டீசனு மாம்பதந் தந்தோம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கவர் பொற் தடமுடிக்குத்
துண்டமதிசேர் சடைக் கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்.

பெரியபுராணம்

## நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பின் அணைந்தபிரான் அடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள் போற்றி

தென்னாடுடை சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

ஒருவரின் வாழ்க்கை வரலாறு என்பது இன்னொருவருக்கு எப்படி வாழ வேண்டும் என்பதற்கான பாடப்புத்தகம் என்பர். அரிது அரிது மானிடப்பிறவி அரிது அத்தகு அருமையான மானிடப்பிறவியை அருமையாகப் பயன்படுத்தி சிவபதம் பெற்ற எம் இனியவர் செல்வராஜன் அவர்களின் வாழ்க்கை வரலாறு சுருக்கமாகத் தருகின்றோம்.

திருமூலநாயனாரால் சிவபூமி என்று போற்றப்பட்ட இலங்கை திருநாட்டில் சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணத்தில், தமிழரின் தொன்மைச் சால்புக்கு இலக்கணமாக விளங்கும் தொல்புரத்தில் இராசவல்லப முதலியார் பரம்பரையில் பெருமயினார் கட்டறை வழிவந்தவர் அப்பாத்துரை.

ஆழ்வையினார் உடையார் அம்பிகைபாகன் உடையார் வழி வந்தவர் ஈஸ்வரி. அப்பாத்துரையும் ஈஸ்வரியும் இனிய இல்லறத்தில் சான்றோர்களின் ஆசியுடன் இருமனம் இணையும் திருமணத்தினூடாக இணைந்தனர்.

அப்பாத்துரையின் முன்னோர்கள் பலநூறு ஆண்டுகளாக விதானையார் பணி செய்தமையாலும் அவரது அண்ணன் கந்தையாவும் விதானையாராக பணி செய்தமையாலும் விதானை குடும்பம் என்றே ஊரவரால் அவர்கள்அழைக்கப்பட்டனர்.

அப்பாத்துரை ஈஸ்வரி தம்பதிகளின் இனிய இல்லறத்தினால் செல்வராஜன், செல்வமலர், மழவராஜன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமலர், திவ்வியரஞ்சினி ஆகிய ஐவர் மக்கட்பேறாய் அமைந்தனர்.

அப்பாத்துரை ஈஸ்வரி தம்பதிகளுக்கு மூத்தமகனாய் 1942 புரட்டாதி 21ம் நாள் நன்னாளில் பிறந்த செல்வராஜன் என்னும் கோமகனே இவ்வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையின் நாயகன் என்பதால், அவர் சார்ந்த விடயங்களை இனி நோக்குவோம்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற திருமுறையை போற்றுகின்ற சைவப் பாரம்பரிய குடும்பத்தில் பிறந்தமையின் பயனாக வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர் அப்பாத்துரை செல்வராஜன். அன்னார் தொல்புரம் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் ஆரம்ப கல்வியை கற்றார். இடைநிலை கல்வியை மகாஜனாக் கல்லூரி, கொழும்பு அலெக்சாண்டிரா கல்லூரியில் பயின்று, தியத்தலாவையில் நில அளவையாளர் மேற்படிப்பை கற்று நில அளவையாளராக அரசு பணி பெற்றார்.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக் கேட்ட தாய் (குறள் 69)

தன்மகனை நற்பண்பு நிறைந்தவன் என பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனை பெற்ற காலத்தில் உற்ற மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாள் என்ற குறளின் பொருளுக்கு அமைவாகவும்

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை

என்நோற்றான் கொல் எனும் சொல் (குறள் 70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் தன் தந்தைக்குச் செய்யத்தக்க கைம்மாறு, இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும் என்ற குறளின் பொருளுக்கு அமைவாகவும் தனது பண்பால் விளங்கினார்.

கற்கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்கு தக என்னும் குறளுக்கு அமைவாக விளங்கிய தமது மூத்தமகனாகிய செல்வராஜனுக்கு திருமணம் செய்து வைத்து மகிழ பெற்றோர் விருப்பம் கொண்டனர். தெல்லிப்பளை இயாமாவளவை சேர்ந்த சுந்தரமூர்த்தி தையல்நாயகி தம்பதிகளன் இரண்டாவது மகளகிய இந்திரா என்று அனைவராலும் அன்பாகஅழைக்கப்படும் சயதேவியை செல்வராஜனுக்கு திருமணம் செய்து வைத்தனர்

இனிய இல்லறத்தின் பயனாக செல்வராஜன் அவர்கள், சுஜாதா (உமா),வரலட்சுமி (ரமா) என்னும் இரு பெண் செல்வங்களை ெற்றர். பிள்ளைகளை செல்லமாக வளர்த்துஉயர்கல்வி ஊட்டினார். பிள்ளைகள் வளர்த்து உத்தியோகம் பார்க்கின்றனர்.

அன்னார் பணியிலகாணிச் சீரமைப்பு ஆணைக்குழு அழுத்கமவில் இருந்த போது நேரடியாக அனுபவித்த இனப்பாகுபாடுகளால் மனம் வெற்து அரசு பணியிலிருந்து விலகினார். ஆயினும் உயர்கல்வி கற்க விருப்பம் கொண்டு கொலண்ட் நாட்டிற்கு சென்று அங்கு செவ்வனே கற்று தேர்ச்சி பெற்றபின் வேலை வாய்ப்பை பெறக் கூடிய வாய்ப்பு ஏற்பட்து, தனது நாட்டில் பணி செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தாலும் உற்றாருடனும் குடும்பத்தாருடனும் சேர்ந்திருக்க இலங்கைக்கு திரும்பினார். ஸ்திரமற்ற நாட்டு நிலைமை காரணமாக ஜேர்மனிக்கு புலம்பெயர்ந்து பின்னர் பிரான்ஸ் நாட்டில் தொழில்புரிந்து வந்தார். அப்போது தனது குடும்பத்தையும் ஐரோப்பாவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவழைத்தார் டென்மார்க் நாட்டில் தான் மனைவி மக்களோடு நிரந்தரமாக குடியேற வாய்ப்பு ஏற்பட்டது.

டெனிஸ் மொழி கற்று தனது கல்வித் தகைமைக்கு ஏற்ப பணியும் பெற்று குடும்பத்தோடு வாழ்ந்து வரும் காலத்தில் தனது பெற்றாருக்கு ஐரோப்பாவை சுற்றிக் காடடிட வாய்ப்புகட்டியதுதனது உடன் பிறவாத அண்ணன் ஜேர்மனியில் வசித்த காலத்தில் குடும்பத்தோடு அங்கு சென்று அகம் மகிழ்வார்.

தாயாரின் இறப்பும் பெரியதாயரரின் இறப்பும் அவரது வாழ்க்கையில் அவரை மிகவும் பாதித்த விடயங்களாகும்.

யாழ்ப்பாணம் சென்று தனது மாமன், மாமியாரை சந்தித்து அகமகிழ்ந்து அவர்களோடு தங்கி தனது மனைவியின் சகோதரங்களின் குடும்பத்தாரோடு சிலகாலம் கழித்தார். இதேபோல் தனது தந்தையாரோடு தங்கி, தனது சகோதரங்களோடும் உறவாடினார். மாமனாரின் வேணடுதலுக்கு அமைவாக குலதெய்வம் குருநாதசுவாமி கோயில் குடமுழுக்கு விழாவை முன்னின்று நடத்தினார்.

மலேசியா சென்று தனது பெரிய தாயாரையும் உடன்பிறவா சகோதரங்களையும் பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் யாவருடனும் அன்பை பகிர்ந்தார் சந்தர்ப்பம் அமையும் பொழுதெல்லாம் இலண்டனிற்கு சென்றுதனது உடன்பிறவா அக்கா குடும்பம், தனது மனைவியின் இளையசகோதரி குடும்பம், நண்பர்கள் ஆகியோரை சந்தித்து மகிழ்ந்தார்.

இந்தியாவுக்கு பல தடைவ சென்று தனது தங்கையர்களுடன் மருமக்களுடன் இருந்தர் "தென்புலத்தோர் தெய்வம் விருந்தொக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல்தலை" என்னும் குறளுக்கு பொருளாகவே வாழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின், சமூகப் பணியில் தன்னை ஈடுபடுத்த விருப்பம் கொண்டார். டென்மார்க்கில் தமிழ்ச் சிறார்களுக்கு தமிழ்ப் பண்பாடு, சமூகச் சால்பு ஆகியவற்றை போதிக்க அமைக்கப்பட்ட பலரூப் தமிழ் டெனிஸ் நட்புறவுச் சங்கத்தில் தன்னை அதிகம் ஈடுபடுத்திக் கொண்டார். சிறார்களோடு அன்புடன் பழகி அவர்களை தமிழில் கதைப்பதை ஊக்குவிப்பார். தனது இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் சில ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட வேல் முருகன் ஆலயத்திற்கு அடிக்கடி சென்று வருவார்

இப்படி இனிதே இருந்தகாலத்தில் பார்க்கின்சன் நோய் இரண்டாண்டுகளுக்கு முன்னர்அவரை பீடித்து சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தவரை இயங்கு நாற்காலியில் அமர்த்தியது மருத்துவம் நிமித்தம் மனைவியோடு தமிழகம் சென்ற போது கோயில்கள் பலவும் தரிசித்து டென்மார்க் திரும்பினார். இந்த ஆண்டு தைமாதம் மகளின் துணையோடு இலண்டன் சென்று தனது மருமகனின் திருமண வைபவத்தில் கலந்து மகிழ்ந்தார்..

இவ்வாறு அன்னார் தனது இறுதிக்காலம் வரையும் அனைவரையும் நேசித்து பழகி சமூகத்தில் சான்றோனாய் வாழ்ந்தார். நோயால் வாடிய தனது பக்தனை தன்னோடு இணைத்துக் கொள்ள இறைவன் விரும்பியமையால் தானோஎன்னவோ தனது பாசத்திற்குரிய மனைவி, மகள்மாரை விட்டு விண்ணுலகம் எய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீகாசி விநாயகர் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியாரின் ஆத்மசாந்தியுரை

ஆழிசூழ் உலகமெல்லாம் போற்றும் நீர் வளமும் நிலவளமும் நிறைவுயிர் பயிர் வளமும் சீருயர் கலை வளமும் சிறப்பு மாந்தர் பேருயிர் வளங்கள் பெருகும் நாட்டின் வடபால் அமைந்த வளமிகு தொல்புரம் எனும் கிராமத்தில் அப்பாத்துரை ஈஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வனாய் செல்வராஜன் அவர்கள் பிறந்தார். அன்னார் சாதாரண தரத்தை மகாஜனக் கல்லூரியிலும், உயர்கல்வியினை கொழும்பிலும் கற்று நில அளவையாளராக தொழில் நியமனம் பெற்றார். "யாமா" வளவு, தெல்லிப்பளையை சேர்ந்த சுந்தரமூர்த்தி தையல்நாயகி தம்பதிகளின் செல்வப் புதல்வி சயதேவியை திருமணம் செய்தார். அதன் பயனாக உமா, ரமா எனும் இரு பெண் குழந்தைகளை பெற்று அவர்களின் கல்வி, அறிவாற்றல் நிமித்தம் டென்மார்க் நகரம் சென்று அங்கும் சிறப்புடன் வாழ்ந்தார். அங்கு சமய ஈடுபாட்டிலும், கலை கலாச்சார ஈடுபாட்டிலும் நெறிதவறாது வாழ்ந்து 02.03.2012 இல் டென்மார்க் நகரில் அமரத்துவம் அடைந்து சிவபதம் சேர்ந்தார். அது எங்கள் உள்ளத்தில் ஆறாய் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. நீர்க்குமிழி போன்ற எமது வாழ்வில் செயற்கரிய செயல்களை செய்வோர் எல்லோர் உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்பது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரது போரிழப்பால் துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகளுக்கு ஆறுதல் மொழி கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ காசிவிநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி பிரார்த்திப்போமாக!

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி.**

சுபம்

**திரு.சுந்தர தியாகராஜக் குருக்கள்,**

**பிரதம குருக்கள்,**

**ஸ்ரீ காசி விநாயகர் தேவஸ்தானம்,**

**தெல்லிப்பளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் அப்பாவே!

மின்னாது முழங்காது மழை பொழிவது போன்று, பெரிதும் அலட்டிக் கொள்ளாமல், எம் கண்முன்னே பிரிந்தால் நாம் தாங்கிக் கொள்ளமாட்டோம் என்று எணிணயாதாலோ அம்புலன்ஸ் வண்டியில் ஏறிய ஒரு சிலி நிமிடங்களில் இம்மண்ணுலக வாழ்வை நீத்தீர்கள், விடியற்காலப் பொழுதில் உங்கள் மக்களையும் கூப்பிட்டு இயல்பான முறையிலேயே கதைத்தீர்கள். நாமும் ஏமாந்துவிட்டோம். பிரிவுக்கான நேரம் என நாம் சற்றும் உணரவில்லை. சென்ற முறை போன்றே அம்புலன்ஸ் வண்டியில் வைத்தியசாலைக்குச் சென்றுவிட்டு பிற்பகல் வீடு திரும்புவோம் என நாம் எண்ணியிருக்க, நீங்களோ எமக்குச் சொல்லாமலே போய்விட்டீர்கள்! ஏன் எம்மை அந்தரிக்க விட்டுப் போனீர்கள் அப்பா? எமக்கு துணை, பாதுகாப்பு யாரப்பா?

இந்திரா என்று பாசத்துடன் அழைப்பதை இடையில் விடுத்து, பிற்காலத்தில் தாய் போன்ற கவனிப்பும், பராமரிப்பும் உங்களுக்குத் தேவையென்று என எண்ணியோ சில வருடங்களுக்கு முன்பிருந்தே என்னை அம்மா என்று அழைக்கத் தொடங்கினீர்கள்? அம்மா என்று என்னை அழைக்கும் போதெல்லாம் உங்கள் அம்மாவிற்குக் கேட்டிருக்கின்றது போலும். அவவிடம் விரைவில் செல்வதற்காகவா அவவிற்கு வந்த மாதிரியான நோயை நீங்களும் எதிர்கொண்டீர்கள்?

நோயின் காரணமாக வலது கை, காலில் ஏற்பட்ட நோ, வலியைப் பற்றி என்றுமே முறைப்பட்டதில்லையே அப்பா! நாம் வலிந்து கேட்டால் "ஓம் கொஞ்சம் நோகின்றது" என்பீர்களே! நோய் காரணமாக எழுந்த வலியையும், துன்பத்தையும் மனதிற்குள் புதைத்து வைத்துக் கொண்டு எம்முடன் இயல்பாகவே நடந்தீர்களே அப்பா! ஆனால் எமக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிலும் உதவ முடியவில்லையே என்ற ஆற்றாமை உங்களிடம் இருந்ததை நாம் உணர்ந்துள்ளோம். மூன்று மாதங்களுக்கொரு தடைவை வைத்தியசாலைக்குச் சென்று கதைக்கும் போது வைத்தியர்கள் நோயைப் பற்றியும் அது எவ்வாறு முன்னேறுகிறது என்பது பற்றியும் விபரிக்க வரும் போது "நான் எவ்வளவு கெதியாக இறப்பேன்?" என்பதே உங்கள் கேள்வியாயிருக்கும். வைத்தியர்களும் உங்களுக்கு உறுதியாகக் கூறினார்கள். இது ஒருவரைக் கொல்லும் வியாதியல்ல, வருத்தும் வியாதியென்று. அதைக்கேட்டு, எம்முடைய பராமரிப்பில், எங்களுக்கு நீங்கள் இன்னும் பலகாலம் துணையாக இருப்பீர்கள் என நாம் நம்பியிருக்க, நீங்களோ உங்களை விரைவில் அழைக்கும்படி இறைவனை மனதினில் வேண்டியிருக்கின்றீர்கள். நீங்களோ "நான் ஒன்றுக்கும் பிரயோசனமில்லாதவன், நடைப்பிணமாக இருக்கின்றேன், வழமையாக நான் விரும்பிச் செய்கின்ற Sodoku கூடச் செய்ய முடியாமலிருக்கின்றேன்" என்று மனதில் வேதனைப்பட்டிருக்கின்றீர்கள். ஆனால் நாமோ வசதியான வீட்டில் உங்களை நன்றாக வைத்திருக்கின்றோம், நன்கு பராமரிக்கின்றோம் என்றே நினைந்திருந்தோம். உங்கள் வேதனையின் அளவை நாம் முற்றிலும் உணராமல் போய்விட்டோம்.

எமது மணவாழ்வில் பிரிவு என்பது தொடர்கதை. போன்றதே. திருமணத்தின் போதே நாம் தொழில் காரணமாக வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தோம். பின்னர் நீங்களும், நானும் மேற்கல்வி காரணமாக வெவ்வேறு காலகட்டத்தில் பிரிந்தோம். நீங்கள் கொலண்ட் நாட்டில் படித்துவிட்டு இங்கிலாந்து சென்று சில மாதங்கள் சகோதரர்களுடன் தங்கியிருந்துவிட்டு, வீட்டு நினைவு தலைதூக்க ஓடி வந்தீர்கள் எம்மிடம். ஆனால் நாட்டு நிலைமை காரணமாக மீண்டும் பறந்தீர்கள் ஐரோப்பாவிற்கு. சில வருடங்களின் பின் டென்மார்க்கில் இணைந்தோம். ஆனால் பிரிவு எம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவைக்கவில்லை. பல தடைவ தொழில் நிமித்தம் இங்கிலாந்திற்குச் சென்று தங்கினீர்கள். பிரிவு உங்களை வாட்டினாலும் வேலையில்லாமல் உங்களால் இருக்க முடியாது போனது. அடிக்கடி எம்மிடம் ஓடி வருவீர்கள். எந்த நேரமும் ஏதோ ஒன்றினைச் செய்ய வேண்டும். வெளியே சென்று தொழில் புரிவதோடு அமையாது, வீட்டிலும் ஏதாவது கழற்றிப் பார்க்க வேண்டும், திருத்த வேண்டும், வீட்டை நேர்த்தியாக்க வேண்டும் என்று சுறுசுறுப்புடனும் உற்சாகத்துடனும் ஈடுபடுவீர்கள். இறுதிக் காலத்தில் ஒன்றும் இயலாதநிலையில்தான் நான் பிரயோசனமில்லாதவன் என்று எண்ணி இப்படி எம்மை விட்டுப் போக விரும்பீனர்களா? நாமோ நீங்கள் நாற்காலியில் இருந்தாலும் கூட எமக்குப் பலம், பாதுகாப்பு உண்டென்றே நம்பியிருந்தோம். ஏமாந்துவிட்டோம்.

முன்னர் ஒவ்வொரு பிரிவின் போதும் மீண்டும் இணைவோம் என்ற உறுதியுடன் பிரிந்து இணைந்து வாழ்ந்தோம். ஆனால் இப்போது சொல்லாமல் கொள்ளாமல் போய்வட்டீர்களே அப்பா!

என்னையும் கூட அழைத்துப் போயிருக்கலாம். நீங்கள் விட்டுப்போன கடமைகளை நான் நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணினீர்கள் போலும். பரவாயில்லை அப்பா, நான் உங்கள் கொள்கைகள், விருப்புகள், எதிர்பார்ப்புக்களை மறக்காமல், உங்களை என் மனதிலிருத்திப் பிள்ளைகளுக்காக வாழ்வேன். உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக.

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**

**பெருமை உடைத்திவ் வுலகு — திருக்குறள்**

மனைவி இந்திரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமதருமை அப்பாவே!

ஏன் இப்படி எம்மை தவிக்கவிட்டுப் போனீர்கள்? நாம் என்ன குறை வைத்தோம் உங்களுக்கு நீங்கள் விரும்பக் கூடிய இடங்களுக்கெல்லாம் அழைத்துச் செல்லவில்லையா? கோவிலுக்கு கடைகளுக்கு, நண்பர்களின் வீடுகளுக்கு, பொது நிகழ்வுகளுக்கு என்று முடிந்தவரை உங்களைக் கூட்டிச் சென்று மகிழச் செய்தோம். மோட்டார் வண்டியில் பிரயாணிப்பதென்றால் மிக உற்சகாமாக இருப்பீர்கள். அத்துடன் எங்களுக்கும் புதிய பாதைகள் காட்டுவதுடன் அறிவுரைகளும் சொல்லுவீர்கள். தள்ளுவண்டியில் உங்களைத் தள்ளிக் கொண்டு உலாப் போய் வந்தோம். அண்மையில் லண்டன் நகரில் உங்கள் மருமகனின் திருமணத்திற்கும் அழைத்துச் சென்று உங்கள் உறவினர் நண்பர்களைச் சந்தித்து அளவளாவி இன்புற வைத்தோம். இவ்வாறு நாம் உங்களைச் சந்தோசமாக வைத்திருக்க முயல நீங்கள் வேறு விதமாகத் திட்டமிட்டுவிட்டீர்களோ அல்லது விதி சதி செய்துவிட்டதோ?

உங்கள் பூவுடல் தான் மறைந்துவிட்டது, எங்கள் சிந்தையிலிருந்து நீங்கள் மறையமாட்டீர்கள். உங்கள் பண்புகளையும் குணங்களையும் நாம் பின்பற்றுவோம். எளிமை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பன உங்கள் தாரக மந்திரமாக இருந்தது. செய்யும் தொழிலே தெய்வம் என்று எந்த வேலையையும் அக்கறையுடன் நேர்த்தியாகச் செய்து முடிப்பீர்கள். பிறருக்கு ஆலோசனை கூறவும், உதவவும் முன்னிற்பீர்கள். எங்கு போவதானாலும், எதைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதனாலும் உரிய நேரத்திற்கு முன்பே ஆயத்தமாகி விடுவீர்கள். உங்களிடமிருந்த தாய்நாட்டுப்பற்றும், தாய்மொழிப் பற்றும், சமயப் பற்றும் மிகவும் போற்றத்தக்கன. பிள்ளைகள் தமிழையும் சமயத்தையும் கற்க வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தீர்கள். எந்தப் பொருளையும் தேவையில்லை என்று எறியமாட்டீர்கள். மீண்டும் எப்போதோ தேவைப்படலாம் என்று சேமித்து வைப்பீர்கள். அதேபோல் பழுதானவற்றைக் கழற்றிப் பார்ப்பதிலும், திருத்துவதிலும் உங்களுக்கு ஆர்வம் அதிகம். சின்ன விடயத்திற்கும் மூன்குநுனியில் கோபம் பொத்தென்று வந்தாலும், விரைவில் அதனை மறந்து இயல்பு நிலைக்கு வந்துவிடுவீர்கள். பகிடிக்கதைகள் சொல்வதிலும் மற்றவர்களைச் சிரிக்க வைப்பதிலும் நீங்கள் கெட்டிக்காரன். இவையெல்லாம் நாம் மறக்கக் கூடியவையல்ல. பசுமையான பல நினைவுகளுடன் எம் சிந்தையில் நீங்கள் வாழ்கின்றீர்கள், அப்பா.

இங்ஙனம்

உங்கள் பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமை அண்ணா..

எல்லாம் வல்ல இறைவனின் திருவடியில் இருக்க ஆசை கொண்டு பூதவுடல் விட்டு பிரிந்தீரே….. உம் பிரிவை தாங்கும் திறனை நமக்கு யார் தருவார்?

தங்கள் முகத்தில் பெற்றோரின் முகத்தை கண்டேனே.. அந்த பேறை இழந்து தவிக்கின்றேனே!

தங்கள் பாசத்தை எங்ஙனம் இனிப் பெறுவேன்? பாசம் தவழும் உங்கள் மொழியை இனி எங்ஙனம் நான் கேட்பேன்? இந்தியாவில் வந்து எம்மோடு கழித்த இனிய நாட்களை இப்போது எண்ணும் போது ஐயகோ…. அவை மீண்டும் வரதோ என்ற நினைவுகள் எழுந்து எம்மை வருத்துகின்றதே!

மாமா என்றும் பாச உறவை இழந்து தவிக்கும் என் பிள்ளைகளுக்கு எங்ஙனம் ஆறுதல் சொல்வேன்?

அண்ணா,

உம் ஆன்மா சாந்தியடைய பொன்னாலையில் எழுந்தருளியிருக்கும் எம்குலதெய்வத்தினை வணங்குகிறேன். சிவபதப்பேறு தாங்கள் பெற்று பிறவாத பேரின்பம் நுகர எல்லாம் வல்ல இறைவன் திருவருட் சம்மதம் வாயப்பதாகுக.

பிரிவால் வாடும்

நெதர்லாந்து

தங்கை திவ்வியரஞ்சினி கிருஷ்ணகுமார்

(கிருஷ்ணகுமார் குடும்பம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய தம்பி....

இடியாக வந்து என்னகத்தில் இறங்கி, பெருந்துயரை என்றும் அகலா வண்ணம்

தந்ததே உன் பிரிவுச் செய்தி!!! உன் பிரிவுச் செய்தியை கேட்க என்ன கொடும்வினை செய்தேன்!!!

சிறுபிராயம் தொட்டு ஒன்றாய் வளர்ந்தோமே.. உடன்பிறந்த உறவு போல் இருந்து தம்பி என்னும் சொல்லுக்கு பொருளாய் வாழ்ந்து இன்று சிவபதம் விரும்பிச் செய்றாய்.. எங்களை வேதனையில் தவிக்கவிட எங்ஙனம் மனம் வந்தது?

உன் பாசத்தை மொழியால் சொல்லத்தான் முடியுமோ? உன் பிரிவுத் துயரில் கொடுமையானது வேறேதும் உண்டோ?

தம்பி, அண்ணா என்று அன்பு பொழியும் குரலை இனி எங்ஙனம் நான் கேட்பேன்?

சித்தப்பா என்ற இனிய உறவை இழந்து தவிக்கும் என் பிள்ளைகளை சமாதானம்

செய்ய முடியாது நான் படும்துயிர் அறிவாயா.. தம்பி?

தம்பி, உன் இனிமையான நினைவுகள் என் நெஞ்சுப் பெட்டகத்துக்குள் தித்திப்பாக என்றும் இருக்கும்!

தம்பி... நீ இறைவனின் திருவருடியில் இன்புற்று இருப்பாய்என்ற உணர்வே, உன் பிரிவுத் துயரால் ஏற்பட்ட வாட்டத்தை போக்குவதற்கு எனக்கு மருந்தாக உள்ளது!

எல்லாம் வல்ல நம்குல தெய்வம் பொன்னாலை நாயகன் ஸ்ரீதேவி பூமாதேவி சமேத பொன்னாலை வரதராஜா பெருமாள் திருவருள் உன்னோடு இருப்பதாகுக.

**உன் பாசத்துக்குரிய அண்ணன்**

**அமெரிக்கா.**

**(கனகராயர் குடும்பம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள தம்பி....

உடன்பிறவாத உறவு என்னும் இலக்கணத்தை தாண்டி உணர்வோடு கலந்து அக்கா என்னும் உரிமையோடு பாசமாய் இருந்தாயே.. உன் பிரிவுத்துயர் சொற்களால் வடிக்கப்படக்கூடியதல்ல!!! பெருகும் கண்ணீருக்குகூட உன்னைப் பிரிந்ததால் ஏற்பட்ட துயர் முழுவதுமாய் புரியவில்லையே!!!

சிறுபிராயம் தொட்டு, எம்மோடு இருந்து என் உடன்பிறந்த தம்பியாய்

வாழ்ந்தாயே! உன் பிரிவு சொல்லுக்குள்ளும் கண்ணீருக்குள்ளும்

அடங்கக் கூடியதோ...! எம்மோடு இலண்டனில் நீ இருந்த காலங்கள் எம்

நினைவுகளை விட்டு அகலுமோ?

உன் அன்பை இனி எங்ஙனம் பெறுவேன்? உன் முகத்தை எங்ஙனம்

பார்ப்பேன்? ஏக்கங்கள் அகத்திலே பெருங்கண்ணீராக

பெருக்கெடுக்கின்றனவே... என்ன செய்வேன்!!!

மாமா என்னும் அருமை உறவை இழந்து தவிக்கும் என் மகளின் துயரை

போக்குவதற்கு வழிதெரியாது தவிக்கின்றேனே தம்பி .. என் செய்வேன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்மைக்கும் மறுமைக்கும் துணையாக நிற்கும் எல்லாம்
வல்ல நம்

குலதெய்வம்

ஸ்ரீதேவி பூமாதேவி சமேத பொன்னாலை வரதராஜா
பெருமாள் அருளும்

சிவபதப்பேறும் உனக்குண்டு என்ற துணிவே எம்மை

ஆற்றுப்படுத்துகின்றது!!!

**இலண்டன்** **உன் பாசத்துக்குரிய தமக்கை**

**ஈஸ்வரசரண் குடும்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Selva Eulogy

It is with our deepest regret and sadness that we bid farewell to our loving cousin known to us and others as Seiva.

Selva was a good father, beautiful husband and a kind, thoughtful family man.

He resided with us at various points during his life whilst studying and working both in the UK and Sri Lanka, he was very much part of our family and much like a younger brother.

The month before his untimely passing he attended his nephew's wedding here in London despite his severe disabilities. All of us admired his resolve to be at the ceremony which was greatly supported by the efforts of his daughter.

Selva was a model employee having gained the qualification as a skilled Arial Cartographer. He was admired and loved among his co-workers, always willing to help where he could. This supportive nature extended towards his country folk as well as to his wife, children and family.

He was independent and had a penchant for home improvements, we were particularly impressed when

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

he transformed an empty basement into a bedroom flat single handed. All this was done with Selva's usual humility.

Selva was passionately interested in cricket and it didn't come as much surprise when we discovered he had represented his school "Mahajana College" as a competent wicket keeper and batsman for his team.

He had an affinity with the young generation, always making time to have light hearted conversations with his nieces and nephews who loved hearing his stories. A particular topic was his love of cars, always sharing his passion with others.

He was a man of few words whose actions spoke volumes.

The respect shown for him was quite evident by the large gathering present at his funeral.

We all miss his presence in so many ways and we can only pray that his atma will rest in peace with the Paramatma.

Om Siva Om.

Saran Athan, Pillai Acca and Ramani

(Sabapathy family)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பா.....

எம் பெரியப்பாவே! (எங்கு சென்றீர்கள் எம்மைத் தவிக்க விட்டு பெரியப்பா?) பெரியப்பா என்று ஆசை தீரக் கூப்பிட்டு உங்களைச் சுத்தி சுத்தி வந்தோமே. எங்கள் நினைவுகளை சற்று பின்னோக்கிப் பார்க்கிறோம். எங்கள் வளர்ச்சியில் நீங்கள் எவ்வளவு அக்கறையாக இருந்தீர்கள். நாம் இலண்டனுக்குச் சென்று கல்வி கற்று முன்னேற வேண்டும் என்ற ஒரே நோக்கில், நீங்கள் கால் நடக்க முடியாத வேளையிலும் காரினில் வந்து நாம் இலண்டனில் கால் பதிக்க உதவினீர்களே, மறக்க முடியுமா? நாம் வசதியாக இருக்கவும், படிக்கவும் நீங்கள் செய்த உதவிகள் எத்தனை எத்தனை....

பெரியப்பா ஆக மட்டுமின்றி நீங்கள் ஒரு நண்பனாகவும் எங்களுடன் பழகினீர்கள். நகைச்சுவைக் கதைகள், பகிடிகள், உங்கள் சிறுபராய வாழ்க்கை ... என்று பல பல சிரித்துச் சிரித்துக் கூறி, அதனூடாக சில அறிவுரைகளை வழங்குவீர்கள். நீங்கள் இலண்டனில் இருக்கும் காலங்களின் சனி, ஞாயிற்றுகிழமைகளை நாம் ஆவலுடன் எதிர்பார்ப்போம். அந்நாட்களில் நீங்கள் எங்கள் வீட்டிற்கு வருவீர்கள். அந்நாட்களில் பல இடங்களுக்கு எம்மைக் கூட்டிச் செல்வீர்கள். எமக்கு அந்நாட்கள் மிகச் சந்தோசமாகக் கழிந்துவிடும்.

சென்ற ஆண்டு நாம் இரு தடைவ டென்மார்க்கிற்கு வந்தபோது, உங்கள் நகைச்சுவை உரையாடலும், தொழில்நுட்ப அறிவும் சற்றும் குறையாமல் முன்பு போல் இருப்பதைத் துல்லியமாக நேரடியாகக் கண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டு உங்கள் மருமகனின் திருமண விழாவிற்கு வந்தபோதும் எங்களுடன் மகிழ்ச்சியாகவே உரையாடினீர்கள். நான் திரும்பவும் இலண்டனுக்கு வருவேன் என்று கூறினீர்கள். நாமும் நம்பியிருந்தோம். ஆயினும் மண்ணுலக வாழ்க்கையை விட்டு விண்ணுலக வாழ்க்கையை விரும்பினீர்கள் போலும். எமக்குச் சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று போய்விட்டீர்களே பெரியப்பா!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய என்றும் இறைவனை பிரார்த்திக்கிறோம்.

இலண்டன

உங்கள் அன்பு பொறாமக்கள்

பிராணா, தீபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள மாமா.............

உங்களின் பிரிவுத்துயர் ஆற்றுப்படுத்த முடியாத பெருந்துயரைத் தந்தது. உங்களுடன் பழகிய நாட்கள் என்னுள் ஏற்படுத்திய அருமையான உணர்வுகள் கண்ணீராக பெருக்கெடுத்தது.

முன்புபலமுறை பழகியிருந்தாலும் இறுதியில் நீங்கள் ஓரிரு மாதங்கள் இந்தியாவில் எம்மோடு கழித்த காலங்கள் என்னுள் அளவிட முடியாத பாசப்பிணைப்பை உங்களோடு ஏற்படுத்திற்று.

கடற்கரை ஓரமாய் நாமிருவரும் பகிர்ந்து கொண்ட விடயங்கள் எப்போதும் அறிவு பூர்வமானதாய் அமைந்து எனக்கு பலவற்றை போதித்தன.

என் வாழ்க்கையில் வழிகாட்டியாய் நீங்கள் இருந்தீர்கள்!

உங்களிடம் இருந்து பல விடயங்களைக் கற்றுக் கொண்டேன் என்பதை நினைக்கும் போது மனம் நெகிழ்கின்றது. இருப்பினும் அவை எவையும் மீண்டும் வரமாட்டாது என்ற யதார்த்தத்தை உணரும் போது மனம் ஏங்குகின்றது.

உடலால் நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் என்னெஞ்சுக்குள் என்றுமே சுடர்விட்டெரியும்!

நீங்கள் சிவபதம் பெற்றிட சகல உயிர்களையும் காத்தருளும் எல்லாம் வல்ல சிவபெருமானை பிரார்த்திக்கின்றேன்.

என்றும் உங்கள் நினைவில்

நெதர்லாந்து கிருஷ்ணகுமார் பிரதீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Messaye of Condolance

Hello Mother,

"We were very sorry to hear of father's passing and know him very for a decade.

He was a simple and great person, loved by everyone. His memory will forever be a source of comfort now, and knowing that he is at peace and rest will comfort us as well.

I have faith that he is in God's hands and will be rewarded for the good life he led"

Regards

Ramya & Baskaran, Chennai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவலைகள்

நல்ல மனம் கொண்டவனே
உள்ளத்தால் உயர்ந்தவனே
சொர்க்கத்தில் இடம்பிடிக்க
ஏன் ஓடி முன் சென்றாய்?

நல்லவர்க்கு எந்நாளும்
சொர்க்கத்தில் இடமுண்டு
தர்க்கம் தெரிந்த உனக்கு
ஏன் இது மட்டும் தெரியவில்லை?

எங்கள் வீட்டில் ஒன்றென்றால்
உங்கள் வீட்டு நிகழ்வென்பாய்
எப்போதும் உன் உதவி
எப்படித் தான் மறந்திடுவோம்?

நன்றிக் கடன் நாம் செய்ய
நாட்கள் தான் இருக்கவில்லை — அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியுடன் உன் நாமம்

எந்நாளும் நினைத்திருப்போம்

எம்மோடும் எப்போதும்

எந்நாளும் நீ வாழ்வாய் - பீம்பி மாமா

இதுமட்டும் காலனுக்கு

ஏன் தான் தெரியவில்லை?

ஆன்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்

**தமிழ் டெனிஸ் கலாச்சார நட்புறவுச் சங்கம் - Ballerup**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ சிவமயம்

# அமரருக்கு ஓர் இதய அஞ்சலி

வாழ்க்கை நீர்க்குமிழி போன்றது, நிலையில்லாது. தமது சொல்லால் செயலால், நடத்தையால், மனித மனங்களை வென்றவர் சிலர். தோற்றவர் பலர். யாருடைய இழப்பு மனதுக்கு துன்பத்தையும், வாழ்வின் நிலையாமையையும் நமக்கு உணர்த்துகின்றதோ அவர்களே மாந்தருள் மாணிக்கமாவார்.

அந்த வகையில் அன்று வெள்ளிக்கிழமை (02.03.2012) வந்த செய்தி எமக்கு பேரிடியாக அமைந்தது. அந்த நல்ல மனிதர் தம் வாழ்வில் யாருக்கும் தீங்கு நினையாத ஒரு உத்தமர். குடும்பத்தினருடன் உரையாடிய நிலையில் அமைதியாக, திடுமென எம்மையெல்லாம் துயரில் ஆழ்த்தி தன் வாழ்வை நிறைவு செய்து கொண்டார்.

எமக்கு தெரிந்த அளவில் அவருடைய வாழ்வை பின்னோக்கி பார்த்தால் அமரர் அவர்கள் வாழ்வில் உண்மை பேசுவதை உயிர்நாடியாக கொண்டவர். என்றும் நீதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மைக்குக் குரல் கொடுப்பவர். நகைச்சுவையாக பேசுவதில் வல்லவர். தொழில்நுட்ப விடயங்களில் இயல்பாகவே அதீத ஈடுபாடு கொண்டவர். அதனை பலருக்கும் பிரயோசனமாகி திருப்தி கொண்டவர். அவருடனான பல நிகழ்வுகள் மனதில் பசுமையாக நிழலாடுகின்றன. அத்தானுடைய மறைவினால் துயருற்றிருக்கும் எமது அக்கா, பிள்ளைகளின் துயரத்தில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

அன்னாருடைய ஆத்மா எல்லாம்வல்ல இறைவனுடைய பாதக்கமலங்களில் சரணாகதி அடைய எமது குல தெய்வங்களை இறைஞ்சுகிறோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!!**

தங்கை,

ராணி குடும்பத்தினர்,

யாமா வளவு,

தெல்லிப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## அமரர் அப்பாத்துரை செல்வராஜன் நினைவஞ்சலி

எழுபதாண்டுகள் பூவுலகில் நிறைவாக வாழ்ந்து, "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என இலங்கையிலும் பல இடங்களிலும், ஐரோப்பாவில் பல நாடுகளிலும் தொழில் புரிந்து, பல இன மக்களுடன் அன்புடன் பழகி, திடீரென உயிர் பிரிந்து எம்மை எல்லாம் துயரத்தில் ஆழ்த்தி அமரராகிவிட்டார் செல்வராஜன் அவர்கள்.

1972ஆம் ஆண்டு மே மாதம் 22ஆந் திகதி திருமணம் செய்து "யாமா வளவு" தெல்லிப்பளையில் சுந்தரவாத்தியார் குடும்பத்தில் ஒருவராகச் சேர்ந்துகொண்டார். 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆந் திகதி இறைவனடி சேரும் வரை "யாமா" வீட்டாருடனான அவருடைய தொடர்பு நெருக்கமாகவே இருந்தது. தன் தாய், தந்தையர், சகோதரர், சுற்றத்தாருடனும், தம் மனைவியின் பெற்றோர் (மாமா, மாமி) சகோதரர், சுற்றத்தாருடனும் அன்புடன் நல் உறவினை பேணி வந்தார். செல்வராஜன் என பெற்றோரால் நாமம் சூட்டப்பட்டு "செல்வர்" என அன்புடன் எல்லாராலும் அழைக்கப்பட்டவர். வாழ்நாள் முழுவதும் செல்வப் பிள்ளையாகவே வாழ்ந்தார். பெற்றாருடன் வாழ்ந்த காலத்தில் மூத்தமகனாக செல்வமாகவே வளர்க்கப்பட்டார். இல்வாழ்க்கையில் நுழைந்த பொழுது "மனைத்தக்க மாண்புடைய மனைவி வாய்க்கப்பெற்று, அன்பும் அறனுமுடைய நல்வாழ்க்கைய வாழ்ந்தார். அந்த வாழ்க்கையின் பயனாக அறிவு ஒழுக்கமுடைய நன் மக்கள் மேலும் பெரும் செல்வமாக வாய்க்கப் பெற்றார்.

இவ்வாறு வாழ்க்கையில் நல்ல பேறுகளையும் பெற்று அனுபவித்து வாழ்ந்தவர். யாவருடனும் இனிமையாகப் பழகும் சுபாவம் உடையவர். கள்ளம் இல்லாம தூய உள்ளம்

கொண்டவர். யாருக்கும் இடைஞ்சல் இல்லாமல் வாழ விரும்பியவர். நோயுற்ற காலத்தில் அவருக்கு எந்த குறையும் இல்லாமல், அர்ப்பணிப்புடன், அக்கறையாக கவனித்தார்கள். குடும்பத்தாருடன் கடைசிவரை கதைத்து உரையாடி இறைவனடி சேர்ந்துவிட்டார். அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அவரை இழந்து தவிக்கும் சின்னக்கா, உமா, ரமா, மற்றும் உறவினருக்கு என்ன ஆறுதல் சொல்வது? அவரின் பேரிழப்பை தாங்கக் கூடிய சக்தியை அவர்களுக்கு ஆண்டவன் வழங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

**"விதியை யாரால் வெல்ல முடியும்".**

**ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி..**

**அன்புடன்**

**பொன்னம்பலம் கலாதேவி**
**குடும்பத்தினர்**

**யாமா வளவு,**
**தெல்லிப்பளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YOU WILL REMAIN IN OUR HEART FOREVER

Our beloved Chittappah, Selvarajan ...... In Denmark. The Sudden demise of him had sent shock waves to his close associates and family members.

He comes from an illustrious family in Tholpuram, Jaffna. He was caring husband, good father and looked after the betterment of his family. Children were given good education and they were well to do in life. His love towards his family is very much admirable.

Chittappah, your trip to Sri Lanka on 2010 was unforgettable. We all had a good time with you. Whenever you came to Sri Lanka you stayed with us. We all loved your company.

You will remain in our hearts forever. Letting you go is difficult and painful decision to do as you are so dear and close to us. Our deepest thoughts and prayers are with you. We are deeply saddened by your loss. Though distance kept you away from us, we were able to keep in touch through our hearts. We remember the best moments with you.

May the blessings of love be upon you, May its peace abide you, May its essence illuminate you heart, now and forever...

We never fail to remember,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

That caring heart,

That cute smile,

That giving hands.

That forgiving mind,

That kind word,

You always gave us.

The moments which we spend with you

Still wandering in our minds..

**The guilty feeling; unable to attend**

**At least your funeral.....**

**Leaving so much pain**

**In our hearts.....**

You have achieved success

Laughed often; loved much;

And lived well....

You have gained the intelligent men

You have given the best you had

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

And made others happy…

Now you have left the world

Better than you found it…..

May you rest in peace…

In the sacred feet of Lord Shiva…

Our beloved soul..

Konar,

Kesini.G.,

Mathumai,

Colombo,
Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dear Perriappa

We were utterly shocked and in disbelief, when we were informed that you had left us. Death brings a heartbreak that no noe an heal, but you gave us memories that even death cannot steal. You were always like a friend to us Perriappa, acting childish and telling us jokes. You would laugh at us but then you would give us thoughtful advice. They say one should laugh for 15 minutes a day, but when we were with you, we surely laughed for more than 15 minutes a day.

We will always remember the way you smile and laugh. The relationship we had was special and eternal. Even when we called Perriamma and she was busy, you would make sure she still talks to us. You would tell us your childhood stories which were always fun to listen to, but it also showed us that you were a hardworking and multitalented man.

You were our favorite 'Air force' Perriappa and we were very lucky to have you, part of our life. There are no goodbyes for us, wherever you are, you will always be in our heart.

Rest In Peace our dear Perriappa.

With love Prana & Thiva

Hopefully your favourite nephew and niece)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்சபா

இந்த பாவின் இறுதியில் மோட்ச பிரார்த்தனை அமைந்திருப்பதால், அனைவரையும் சிவசிந்தையோடு கிரகித்து படிப்பதை உள்வாங்கி மோட்சப் பிரார்த்தனை பகுதியில் எம்மோடு இணைந்து பங்கெடுக்குமாறு பணிவோடு வேண்டுகிறோம்.

யாழ் பண்பின்

தொன்மையின் சான்றாய்

சைவமும் தமிழும்

செழித்து விளங்கும்

தொன்மை நகர் - தொல்புரத்தில்

சீரமேவும் சைவத்திருக்குலத்தில்

அப்பாத்துரை ஈஸ்வரி

தம்பதியரின் இனிய

இல்லறத்தின் பேறாய்

மூத்த மகவாய்

பூத்தவர் எம் - இனிய

செல்வராஜன் என்னும்

உத்தமர்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சால்புக்கு இலக்கணம்!

மகன் என்னும்

சொல்லுக்கு இலக்கணம்!

கலைமகளின் அன்புக்கு

இலக்கணம்!

கல்வியின் பயனாய்

நில அளவையாளர்

அரசு பணி அமைந்திடவே

பணியே தவமாய்

திருத்தொண்டு ஆற்றிய

திருமகன் எம் - உத்தமர்

செல்வராஜன் என்னும்

இனியவர்!!!!

சீர்மேவும் சைவத்திருக்குலத்தில்

தெல்லிப்பழை நன்னகரில்

சுந்தரமூர்த்தி தையல்நாயகி

தம்பதியரின் இனிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தின் பேறாய்

பூத்த அருமைமகள்

சயதேவி கரம்பற்றி

நல்லறமான இல்லறத்தில்

இணைந்து உமா

ரமா என்னும்

இனிய செல்வங்களை

தவப்பயனாய் கண்ட

எம் அருமை

உத்தமர் செல்வராஜன்

என்னும் இனியவர்!!!!

டென்மார்க் திருநாட்டில்

சைவமரபு பிறழாது

மண்ணின் சால்பு

பேணிய அருமையின்

வடிவம் எம்

உத்தமர் செல்வராஜன்

என்னும் இனியவர்!!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத் தலைவனாய்

உறவினர்க்கு உறவாய்

நண்பர்களுக்கு நட்பாய்

சமூகத்தில் சான்றோனாய்

சைவத்தில் அன்பனாய்

விளங்கிய உத்தமர் - எம்

அருமை செல்வராஜன்

என்னும் இனியவர்!!!

சிவகணங்களே வருகவே!!!!

மண்ணில் நல்ல

வண்ணம் வாழ்ந்த

உத்தமரை சிவலோகம்

அழைத்திட சிவகணங்களே

வருகவே!!!!

சிவபுராணம் ஓத

சிவநாமம் ஒலிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகணங்களே வருகவே!!!!

திருக்கைலாய வாசல்

திறக்கவே

சிவகணங்களே வருகவே!!!!

சிவபெருமான் திருவடியில்

எம் உத்தமரை

சேர்த்திட சிவகணங்களே

வருகவே!!!

சிவகாமி உடனாய சிவபெருமானே போற்றி!

பேரின்ப பெருங்கருணையே போற்றி!!

மாயப்பிறப்பறுக்கும் எம்பெருமானே போற்றி!!!

வினையின் பிடியில்

தவழும் நாம் தொடுத்த

சொல் அவமாயினும்

நின் திருநாமங்கள்

தோத்திரம் என்னும்

துணிபோடு வேண்டுகிறோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்திருவடியே சிந்தித்து

துதிக்கின்றோம்!!!

எம் இனியவர்

நும் அன்பர்

ஆன்மாவுக்கு நின்திருவடியில்

அடைக்கலம் அளித்திடுவீர்!

பிறவாத பேரின்பம்

நல்கிடுவீர்!

போற்றி ஓம் நமசிவாய

போற்றி ஓம் நமசிவாய

போற்றி ஓம் நமசிவாய

**ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!! ஓம் சாந்தி!!!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 21.09.1942



விண்ணில் 02.03.2012

## அமரர் அப்பாத்துரை செல்வராஜன்

தொல்புரம் ஈன்றெடுத்த அன்புச் செல்வமே
டென்மார்க் வென்றெடுத்த பண்புச் சிகரமே
நிலமளத்த பொன்மனச் செம்மலே
காலனை வெல்ல முடியவில்லையோ?
பீம்பி மாமா பீம்பி மாமா என சிறுவர்களாலும்
"Uncle", "Uncle" என அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்ட
அன்புச் செல்வாவே நீ சென்ற இடம் எதுவோ?
சங்கத்தில் உன் பங்களிப்பு இனி வருமா?
உன் இழப்பு ஏற்கத் தகுமோ?

அன்னாரின் இழப்பால் அல்லலுற்று, ஆறாத்துயருறும் அன்பு மனைவி, மக்கள் மற்றும் உற்றார் உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

Herlev Sygehus Kapel, Herlev Rangvej 75, 2730 Herlev, Denmark.

தமிழ் டெனிஸ் கலாச்சார நட்புறவுச் சங்கம் - Ballerup

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Death is nothing at all. I have only slipped away into the next room. I am I, and you are you. Whatever we were to each other, that we are still.*

*Call me by my old familiar name, speak to me in the easy way you always used. Put no difference into your tone, wear no forced air of solemnity or sorrow.*

*Laugh as we always laughed at the little jokes we always enjoyed together. Play, smile, think of me, pray for me. Let my name be ever the household word that it always was. Let it be spoken without effort, without the ghost of a shadow in it.*

*Life means all that it ever meant. It is the same as it ever was; there is absolute unbroken continuity. What is death but a negligible accident? Why should I be out of mind because I am out of sight? I am waiting for you for an interval somewhere very near, just around the corner.*

*All is well. Nothing is past; nothing is lost. One brief moment and all will be as it was before. How we shall laugh at the trouble of parting when we meet again.*

**Canon Henry Scott-Holland**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரின் வாழ்க்கை தடத்தின் பதிவுகளில் சில............










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வினா – விடை

## திருச்சிற்றம்பலம்

## முதலாவது

## கடவுளியல்

01. உலகத்துக்குக் கருத்தா யாவர்?

சிவபெருமான்

02. சிவபெருமான் எப்படிப்பட்டவர்?

என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்

03. சிவபெருமான் ஆன்மாக்களுக்காகச் செய்யுந் தொழில்கள் எவை?

படைத்தல், காத்தல், அழித்தல், என்னும் மூன்றுமாம்

04. சிவபெருமான் இந்த மூன்று தொழில்களையும் எதைக் கொண்டு செய்வார்.?

தமது சத்தியைக் கொண்டு செய்வார்.

05. சக்தி என்னுஞ் சொல்லுக்குப் பொருள் யாது?

வல்லமை

06. சிவபெருமானுக்குச் சக்தி யாவர்?

உமாதேவியார்

07. சிவபெருமானுடைய திருக்குமாரர்கள் யாவர்?

விநாயகக் கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள் என்னும் நால்வர்

08. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு உமாதேவியாரோடு எழுந்தருளியிருக்கும் முக்கிய ஸ்தானம் யாது?

திருக்கைலாசமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு எவ்விடங்களிலே நின்று அருள் செய்வர்?

சிவலிங்கம் முதலாகிய திருமேனிகளிடத்திலும், சைவாசாரியாரிடத்திலும், சிவனடியாரிடத்திலும் நின்று அருள் செய்வர்.

## திருச்சிற்றம்பலம்

## இரண்டாவது

## புண்ணிய பாவவியல்

10. சிவபெருமான் ஆன்மாக்களுக்காக அருளிச் செய்த முதனூல்கள் எவை?

வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம்

11. வேத சிவாகமங்களில் விதிக்கப்பட்டவைகள் எவை?

புண்ணியங்கள்

12. புண்ணியங்களாவன யாவை?

கடவுளை வழிபடுதல்: தாய், தகப்பன், உபாத்தியாயர், குரு முதலிய பெரியோர்களை வணங்குதல், உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல், செய்ந்நன்றியறிதல் முதலானவைகள்.

13. புண்ணியங்களைச் செய்தவர் எதனை அனுபவிப்பர்?

மேலுலகங்களாகிய புண்ணிய லோகங்களிலே போய், இன்பத்தை அனுபவிப்பர்.

14. வேத சிவாகமங்களிலே விலக்கப்பட்டவைகள் எவைகள்?

பாவங்கள்

15. பாவங்களாவன யாவை?

கொலை, களவு, கள்ளுக் குடித்தல், மாமிசம் புசித்தல், பொய் பேசுதல், வியபிசாரம், சூதாடுதல் முதலானவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பாவங்களைச் செய்தவர் எதனை அனுபவிப்பர்?

நரகத்திலே விழுந்து, துன்பத்தை அனுபவிப்பர்.

திருச்சிற்றம்பலம்

## மூன்றாவது

## விபூதியல்

17. சிவபெருமானை வழிபடும் சமயத்திற்குப் பெயர் யாது?

சைவசமயம்

18. சைவசமயிகள் சரீரத்தில் அவசியமாகத் தரிக்க வேண்டிய அடையாளம் யாது?

விபூதி

19. விபூதியாவது யாது?

பசுவின் சாணத்தை அக்கினியாலே சுடுதலால் உண்டாகிய திருநீறு

20. எந்த நிற விபூதி தரிக்கத்தக்கது?

வெள்ளைநிற விபூதி

21. விபூதியை எதில் எடுத்து வைத்துக் கொண்டு தரித்தல் வேண்டும்?

பட்டுப் பையிலேனும், சம்புடத்திலேனும் எடுத்து வைத்துக் கொண்டு தரித்தல் வேண்டும்.

22. விபூதியை எந்தத் திக்குமுகமாக இருந்து கொண்டு தரித்தல் வேண்டும்?

வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு தரித்தல் வேண்டும்.

23. விபூதியை எப்படித் தரித்தல் வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து 'சிவசிவ' என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் நெற்றியிலே தரித்தல் வேண்டும்.

24. விபூதி நிலத்திலே சிந்தினால் யாது செய்தல் வேண்டும்?

சிந்திய விபூதியை எடுத்து விட்டு, அந்த இடத்தைச் சுத்தி செய்தல் வேண்டும்.

25. நடந்து கொண்டாயினும் கிடந்து கொண்டாயினும் விபூதி தரிக்கலாமா?

தரிக்கலாகாது

26. எக்காலங்களில் விபூதி அவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்.

நித்திரை செய்யப் புகும் போதும், நித்திரை விட்டு எழுந்தவுடனும், தந்தசுத்தி செய்தவுடனும், சூரியன் உதிக்கும் போதும், அத்தமிக்கும் போதும், ஸ்நானஞ் செய்த பின்னும், போசனத்துக்கு போகும் போதும், போசனஞ் செய்த பின்னும் விபூதி அவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்.

27. ஆசாரியராயினும் சிவனடியாராயினும் விபூதி தந்தால், எப்படி வாங்கல் வேண்டும்?

மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும் நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, இரண்டு கைகளையும் நீட்டி வாங்கல் வேண்டும்.

28. விபூதி வாங்கித் தரித்துக் கொண்ட பின் யாது செய்தல் வேண்டும்?

முன்போல் மீண்டும் நமஸ்கரித்தல் வேண்டும்.

29. சுவாமி முன்னும், குரு முன்னும் சிவனடியார் முன்னும் எப்படி நின்று விபூமி தரித்தல் வேண்டும்?

முகத்தைத் திருப்பி நின்று தரித்தல் வேண்டும்.

30. விபூதி தாரணம் எத்தனை வகைப்படும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தூளனம், திரிபுண்டரம் என இரண்டு வகைப்படும். (திருபுண்டரம் - மூன்று குறி)

31. திருபுண்டரந் தரிக்கத்தக்க தானங்கள் யாவை?

சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள், இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினாறுமாம்.

இவைகளுள், விலாப்புறம் இரண்டையும் நீக்கிக் காதுகள் இரண்டையுங் கொள்வதுமுண்டு. முழங்கைகளையும் மணிக்கட்டுக்களையும் நீக்கிப் பன்னிரண்டு தானங் கொள்வதும் உண்டு.

32. திருபுண்டரந் தரிக்குமிடத்து, நெற்றியில் எவ்வளவு நீளந்தரித்தல் வேண்டும்?

இரண்டு கடைப்புருவ எல்லை வரையுந் தரித்தல் வேண்டும். அதிற் கூடினாலும் குறைந்தாலும் குற்றமாம்

33. மார்பிலும் புயங்களிலும் எவ்வளவு நீளந்தரித்தல் வேண்டும்?

அவ்வாறங்குல நீளந் தரித்தல் வேண்டும்.

34. மற்றைத் தானங்களில் எவ்வளவு நீளந் தரித்தல் வேண்டும்?

ஒவ்வோரங்குல நீளந் தரித்தல் வேண்டும்.

35. மூன்று குறிகளின் இடைவெளி எவ்வளவினதாய் இருத்தல் வேண்டும்?

ஒவ்வோரங்குல அளவினதாக இருத்தல் வேண்டும். ஒன்றை ஒன்று தீண்டலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

## நான்காவது

## சிவமூலமந்திரவியல்

36. சைவசமயிகள் நியமமாகச் செபிக்க வேண்டிய சிவமூல மந்திரம் யாது?

ஸ்ரீ பஞ்சாசஷரம்

37. ஸ்ரீபஞ்சாசஷர செபஞ் செய்தற்கு யோக்கியராவார் யாவர்?

மதுபானமும் மாமிச போசனமும் இல்லாதவராய், ஆசாரமுடையவராய், சிவதீசை பெற்றவராய் உள்ளவர்.

38. ஸ்ரீ பஞ்சாசஷரத்திலே எத்தனை உருநியமமாகச் செபித்தல் வேண்டும்?

நூற்றெட்டுருவாயினும், பத்துருவாயினும் நியமமாகச் செபித்தல் வேண்டும்.

39. எந்தத் திக்கு முகமாக இருந்து செபித்தல் வேண்டும்?

கிழக்கு முகமாகவேனும், வடக்கு முகமாகவேனும் இருந்து செபித்தல் வேண்டும்.

40. எப்படி இருந்து செபித்தல் வேண்டும்.

முழந்தாள் இரண்டையும் மடக்கி, காலோடு காலை அடக்கி, இடத் தொடையினுள்ளே வலப்புறங்காலை வைத்து, இரண்டு கண்களும் மூக்குநுனியைப் பொருந்த நிமிர்ந்திருந்து கொண்டு செபித்தல் வேண்டும்.

41. எப்படி இருந்து செபித்தலாகாது?

சட்டை இட்டுக்கொண்டும், தலையிலே வேட்டிகட்டிக் கொண்டும்,போர்த்துக்கொண்டும், குடுமியை விரித்துக் கொண்டும், கௌபீனந் தரியாமலும், வேட்டி தரியாமலும், பேசிக்கொண்டும், இருளில் இருந்து கொண்டும் செபிக்கலாகாது.

42. செபஞ்செய்யும் பொழுது மனம் எங்கே அழுந்திகக் கிடத்தல் வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானிடத்திலே அழுந்திக் கிடத்தல் வேண்டும்.

43. நிற்கும் பொழுதும், நடக்கும் பொழுதும், கிடக்கும் பொழுதும், இருக்கும் பொழுதும், கிடக்கும் பொழுதும், மற்றை எத்தொழிலைச் செய்யும் பொழுதும் மனசை எதிலே பதித்தல் வேண்டும்?

உயிர்க்குயிராகிய சிவபெருமானுடைய திருவடிகளிலேயே மனசைப் பதித்தல் வேண்டும்.

44. மரிக்கும் பொழுது எப்படி மரித்தல் வேண்டும்?

வேறொன்றிலும் பற்று வையாது, சிவபெருமானிடத்திலே பற்று வைத்,து தமிழ் வேதத்தைக் கேட்டுக் கொண்டும், ஸ்ரீ பஞ்சாசஷரத்தை உச்சரித்துக் கொண்டும் மரித்தல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

## ஐந்தாவது

## நித்திய கருமவியல்

45. நாடோறும் நியமமாக எந்த நேரத்தில் நித்திரை விட்டெழுதல் வேண்டும்?

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னே நித்திரை விட்டெழுதல் வேண்டும்.

46. நித்திரை விட்டெழுந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

விபூதி தரித்துச் சிவபெருமானைத் தியானித்துத் தோத்திரஞ் செய்து கொண்டு, பாடங்களைப் படித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலசலபோசனம்

47. அதற்குப் பின் யாது செய்யத்தக்கது?

மலசல போசனஞ் செய்யத்தக்கது.

48. எவ்விடத்திலே மலசலங் கழித்தல் வேண்டும்?

திருக்கோயிலுக்குத் தூரமாய் உள்ள தனியிடத்திலே மலசலங் கழித்தல் வேண்டும்.

49. எவ்விடங்களிலே மலசலங் கழிக்கலாகாது?

வழியிலும், குழியிலும், நீர் நிலைகளிலும், நிரக்கரையிலும், கோமயம் உள்ள இடத்திலும், சம்பர் உள்ள இடத்திலும், சுடுகாட்டிலும், பூந்தோட்டத்திலும், மரநிழலிலும், உழுத இடத்திலும், அறுகம் பூமியிலும், பசுமந்தை நிற்கும் இடத்திலும், புற்றிலும், அருவி பாயும் இடத்திலும், மலையிலும் மலசலங் கழித்தலாகாது.

50. எந்தத் திக்கு முகமாக இருந்து மலசலங்கழித்தல் வேண்டும்?

பகலிலே வடக்கு முகமாகவும், இரவிலே தெற்கு முகமாகவும் இருந்து கொண்டு, மலசலங் கழித்தல் வேண்டும்.

51. எப்படி இருந்து மலசலங் கழித்தல் வேண்டும்?

தலையையும் காதுகளையும் வஸ்திரத்தினாலே சுற்றி, மூக்கு நுனியைப் பார்த்துக் கொண்டு, மௌனமாக இருந்து மலசலங்கழித்தல் வேண்டும்

## சௌசம்

52. மலசலங் கழித்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

எழுந்து சலக்கரையை அடைந்து, சலத்துக்கு ஒரு சாணுக்கு இப்பால் இருந்து கொண்டு சௌசஞ் செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. சௌசம் எப்படிச் செய்தல் வேண்டும்?

மண்ணும் சலமுங் கொண்டு, இடக்கையினாலே குறியில் ஒரு தரமும், குதத்தில் ஐந்து தரத்துக்கு மேலும் இடக்கையை இடையிடையே ஒவ்வொரு தரமும், பின்னும் இடக்கையைப் பத்துத்தரமும், இரண்டு கையையுஞ் சேர்த்து ஏழு தரமும் சுத்தி செய்து, சகனத்தைத் துடைத்து, கால்களை முழங்கால் வரையும், கைகளை முழங்கை வரையும் ஒவ்வொருதரங் கழுவல் வேண்டும்.

54. இப்படிச் செய்த பின் யாது செய்தல் வேண்டும்.?

அவ்விடத்தை விட்டு வேறொரு துறையிலே போய் வாயையும், கண்களையும், நாசியையும், காதுகளையும் கை கால்களில் உள்ள நகங்களையுஞ் சுத்தி செய்து, எட்டுத் தரஞ் சலம் வாயிற்கொண்டு இடப்புறத்திலே கொப்பளித்தல் வேண்டும்.

55. வாய் கொப்பளித்த பின் யாது செய்தல் வேண்டும்?

தலைக்கட்டு இல்லாமல் மூன்றுதரம் ஆசமஞ் செய்தல் வேண்டும். (ஆசமனம் - உறிஞ்சுதல்)

56. ஆசமனம் எப்படிச் செய்தல் வேண்டும்?

வலக்கையை விரித்துப் பெருவிரலையும் சிறு விரலையும் பிரித்து விட்டு, பெருவிரலடியிற் சார்ந்த உழுந்தமிழ்ந்து சலத்தை ஆசமித்தல் வேண்டும்.

57. சௌசத்திக்குச் சமீபத்திலே சலம் இல்லையானால் யாது செய்தல் வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரத்திலே சலம் கொண்டு ஓரிடத்தில் வைத்துக் கொண்டு, மலசலம் கழித்து, சௌசஞ் செய்து விட்டு, பாத்திரத்தைச் சுத்தி செய்து, சலம் மொண்டு வாய் கொப்பளித்து, கைகால் கழுவல் வேண்டும்.

## தந்த சுத்தி

58. சௌசத்துக்குப் பின் யாது செய்யத்தக்கது?

தந்த சுத்தி செய்யத்தக்கது.

59. எதனாலே தந்தசுத்தி செய்தல் வேண்டும்?

சலத்தினாலே கழுவப்பட்ட பற்கொம்பினாலேனும், இலையினாலேனும் தந்த சுத்தி செய்தல் வேண்டும்.

60. எந்தத் திக்கு முகமாக இருந்து தந்த சுத்தி செய்தல் வேண்டும்?

கிழக்கு முகமாகவேனும், வடக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு தந்த சுத்தி செய்தல் வேண்டும்.

61. தந்தசுத்தி எப்படிச் செய்தல் வேண்டும்?

பல்லின் புறத்தையும் உள்ளையுஞ் செவ்வையாகச் சுத்தி செய்து ஒரு கழியை இரண்டாகப் பிளந்து அவைகளினாலே நாக்கை வழித்து இடப்புறத்திலே போட்டுவிட்டு, சலம் வாயிற்கொண்டு பன்னிரண்டு தரம் இடப்புறத்திலே கொப்பளித்து முகத்தையும் கைகால்களையுங் கழுவல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. நின்று கொண்டாயினும் நடந்து கொண்டாயினும், போர்த்துக் கொண்டாயினும் தந்தசுத்தி பண்ணலாமா?

பண்ணலாகாது

## ஸ்நானம்

63. தந்தசுத்திக்குப் பின் யாது செய்யத்தக்கது?

ஸ்நானஞ் செய்யத்தக்கது.

64. ஸ்நானஞ் செய்யத்தக்க நீர் நிலைகள் யாவை?

ஆறு, ஓடை, குளம், கேணி, மடு முதலியவைகளாகும்.

65. ஸ்நானஞ் செய்யுமுன் யாது செய்தல் வேண்டும்?

கௌபீனத்தைக் கசக்கிப் பிழிந்து தரித்து, இரண்டு கைகளையுங் கழுவி, வேட்டியைத் தோய்த்து அலம்பித் தரித்து, உடம்பைச் சலத்தினாலே கழுவிச் செவ்வையாகத் தேய்த்துக் கொள்ளல் வேண்டும்.

66. எவ்வளவினதாகிய சலத்திலே இறங்கி ஸ்நானஞ் செய்தல் வேண்டும்?

கொப்பூழளவினாதாகிய சலத்திலே இறங்கி ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

67. எந்தத் திக்கு முகமாக நின்று ஸ்நானஞ் செய்தல் வேண்டும்?

நதியிலேயானால் அதற்கு எதிர்முகமாக நின்றும், குளம் முதலியவைகளிலேயானால் கிழக்கு முகமாகவேனும், வடக்கு முகமாகவேனும், வடக்கு முகமாகவேனும் நின்றும் ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. சலத்திலே எப்படி முழுகல் வேண்டும்?

ஆசமனஞ் செய்து, இரண்டு காதுகளையும் இரண்டு பெருவிரல்களினாலும், இரண்டு கண்களையும் இரண்டு சுட்டு விரல்களினாலும், இரண்டு நாசிகளையும் இரண்டு நடுவிரல்களினாலும் மூடிக் கொண்டு சிவபெருமானைச் சிந்தித்து முழுகல் வேண்டும்.

69. இப்படி முழுகினவுடனே யாது செய்தல் வேண்டும்?

ஆசமனஞ் செய்து கொண்டு, கரையிலேறி வேட்டியைப் பிழிந்து தலையிலுள்ள ஈரத்தைத் துவட்டி உடனே நெற்றியிலே விபூதி தரித்து, உடம்பிலுள்ள ஈரத்தைத் துவட்டி குடுமியை முடிந்து, ஈரக் கௌபீனத்தைக் களைந்து, உலர்ந்த கௌபீனத்தைத் தரித்து, இரண்டு கைகளையுங் கழுவி உலர்ந்த வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டு, ஈரவஸ்திரத்தையும் கௌபீனத்தையும் உலரும்படி கொடியிலே போடல் வேண்டும்.

70. சிரஸ்நானஞ் செய்ய இயலாதவர் யாது செய்தல் வேண்டும்?

கண்ட ஸ்நானமேனும், கடி ஸ்நானமேனுஞ் செய்தல் வேண்டும்.

71. கண்ட ஸ்நானமானமாவது யாது?

சலத்தினாலே கழுத்தின் கீழே கழுவி, கழுவாது எஞ்சியஉடம்பை நனைந்த வஸ்திரத்தினாலே ஈரம்படும்படி துடைப்பது.

72. கடி ஸ்நானமாவது யாது?

சலத்தினாலே அரையின் கீழே கழுவி, கழுவாது எஞ்சிய உடம்பை நனைந்த வஸ்திரத்தினாலே ஈரம்படும்படி துடைப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுட்டானம்

73. ஸ்நானத்துக்குப் பின் யாது செய்தல் வேண்டும்?

சுத்த சலங்கொண்டு அனுட்டானம் பண்ணி, பஞ்சாக்ஷர செபஞ் செய்து தோத்திரம் பண்ணல் வேண்டும்.

# போசனம்

74. அதற்குப் பின் யாது செய்யத் தக்கது?

போசனஞ் செய்யத்தக்கது.

75. போசன பந்திக்கு யோக்கியராவார் யாவார்?

மதுபானமும் மாமிசபோசனமும் இல்லாதவராயும், சம சாதியாராயும், ஆசாரம் உடையவராயும் உள்ளவர்.

76. எவர்களிடத்திலே போசனம் பண்ணலாகாது?

தாழ்ந்த சாதியாரிடத்திலும், கள்ளுக் குடிப்பவரிடத்திலும், மாமிசம் புசிப்பவரிடத்திலும். ஆசாரம் இல்லாதவரிடத்திலும் போசனம் பண்ணலாகாது.

77. இவர்கள் காணும்படி போசனம் பண்ணலாமா?

போசனம் பண்ணலாகாது.

78. எவ்வகைப்பட்ட தானத்தில் இருந்து போசனம் பண்ணல் வேண்டும்?

கோமயத்தினாலே மெழுகப்பட்ட தானத்தில் இருந்து போசனம் பண்ணல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

79. போசனத்துக்குரிய பாத்திரங்கள் யாவை?

வாழையிலை, பலாவிலை, புன்னையிலை, பலாசிலை, பாதிரியிலை, தாமரையிலை என்பவைகளாம்.

80. போசன பாத்திரங்களை யாது செய்த பின் போடல் வேண்டும்?

சலத்தினாலே நன்றாகக் கழுவியபின் போடல் வேண்டும்.

81. வாழையிலையை எப்படிப் போடல் வேண்டும்?

தண்டுரியாமல் அதனுடைய அடி வலப்பக்கத்திலே பொருந்தும்படி போடல் வேண்டும்.

82. இலைபோட்டிபின் யாது செய்தல் வேண்டும்?

அதிலே சலத்தினாலே புரோஷித்து, லவணம், கறி, அன்னம் பருப்பு, நெய் இவைகளைப் படைத்தல் வேண்டும்.

83. போசனம் பண்ணும் போது எப்படி இருத்தல் வேண்டும்?

வீண் வார்த்தை பேசாமலும், சிரியாமலும், தூங்காமலும், அசையாமலும், கால்களை மடக்கிக் கொண்டு செவ்வையாக இருத்தல் வேண்டும்.

84. போசனம் எப்படிப் பண்ணல் வேண்டும்?

அன்னத்திலே பிசையத்தக்க பாகத்தை வலக்கையினாலே வலப்பக்கத்திலே வேறாகப் பிரித்து பருப்பு நெய்யோடு பிசைந்து, சிந்தாமற் புசித்தல் வேண்டும். அதன்பின் சிறிது பாகத்தை முன்போலப் பிரித்து, புளிக்கறியோடாயினும், ரசத்தோடாயினும் பிசைந்து புசித்தல் வேண்டும். கறிகளை இடையிடையே தொட்டுக் கொள்ளல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலையிலும், கையிலும் பற்றறத் துடைத்துப் புசித்தபின், வெந்நீரேனும் தண்ணீரேனும் பானம் பண்ணல் வேண்டும்.

85. போசனம் பண்ணும் போது உமிழத்தக்கதை எங்கே உமிழ்தல் வேண்டும்?

இலையின் முற்பக்கத்தை மிதத்தி, அதன் கீழ் உமிழ்தல் வேண்டும்.

86. போசனம் பண்ணும் போது மனதை எதிலே இருத்துதல் வேண்டும்?

சிவபெருமானுடைய திருவடியிலே இருத்துதல் வேண்டும்.

87. போசனம் முடிந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

எழுந்து, வீட்டுக்குப் புறத்தேபோய், கைகளைக் கழுவி, சலம் வாயிற் கொண்டு பதினாறுதரம் இடப்புறத்திலே கொப்பளித்து, வாயையும், கைகளையும் கால்களையுங் கழுவ வேண்டும்.

88. உச்சிட்டத்தை எப்படி அகற்றல் வேண்டும்?

இலையை எடுத்து எறிந்துவிட்டு, கைகழுவிக் கொண்டு உச்சிட்டதானத்தை கோமயஞ் சேர்ந்த சலந் தெளித்து, மெழுகி புறத்தே போய்க் கைகழுவிவிட்டு, பின்னும் அந்தத் தானத்திலே சலந் தெளித்துவிடல் வேண்டும்.

89. உச்சிட்ட தானத்தை எப்படி மெழுகுதல் வேண்டும்?

இடையிலே கையை எடாமலும், முன்பு தீண்டிய இடத்தைப் பின்பு தீண்டாமலும், புள்ளியில்லாமலும் மெழுகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படித்தல்

90. போசனத்துக்குப் பின் யாது செய்யத்தக்கது?

உபாத்தியாரிடத்தில் கல்வி கற்கத்தக்கது.

## இரவிற் செய்யும் கருமம்

91. சூரியன் அஸ்தமிக்கும் போது யாது செய்தல் வேண்டும்?

மலசல போசனஞ் செய்து, சௌசமும், ஆசமனமும் பண்ணி, விபூதி தரித்து, சிவபெருமானை வணங்கித் தோத்திரஞ் செய்து கொண்டு, விளக்கிலே பாடங்களைப் படித்தல்வேண்டும்.

92. அதன் பின் யாது செய்தல் வேண்டும்?

போசனஞ் செய்து நூறடி உலாவிச் சிறிது நேரஞ் சென்ற பின் சயனித்தல் வேண்டும்.

93. எப்படிச் சயனித்தல் வேண்டும்?

கிழக்கேயாயினும், மேற்கேயாயினும், தெற்கேயாயினும், தலைவைத்து, சிவபெருமானைச் சிந்தித்துக் கொண்டு வலக்கை மேலாகச் சயனித்தல் வேண்டும். வடக்கே தலை வைக்கலாகாது.

94. எப்போது எழுந்துவிடல் வேண்டும்?

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னே எழுந்து விடல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

## ஆறாவது

## சிவாலய தரிசனவியல்

95. சிவபெருமானை வழிபடுவதற்கு உரிய முக்கிய ஸ்தானம் யாது?

திருக்கோயில்

96. திருக்கோயிலுக்கு எப்படிப் போதல் வேண்டும்?

ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து, வீபூதி இட்டுக் கொண்டு போதல் வேண்டும்.

97. திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தைத் தரிசித்து, இரண்டு கைகளையுஞ் சிரசிலே குவித்து சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு, உள்ளே போதல் வேண்டும்.

98. திருக்கோயிலினுள்ளே போனவுடன் யாது செய்தல் வேண்டும்?

பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

99. கிழக்கு நோக்கிய சந்நிதாயத்திலும், மேற்கு நோக்கிய சந்நிதானத்திலும், எந்தத் திக்கிலே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்?

வடக்கே தலை வைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

100. தெற்கு நோக்கிய சந்நிதானத்திலும், வடக்கு நோக்கிய சந்நிதானத்திலும், எந்தத் திக்கிலே தலை வைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்?

கிழக்கே தலை வைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. எந்தத் திக்குகளிலே கால்நீட்டி நமஸ்காரம் பண்ணலாகாது?

கிழக்கிலும், வடக்கிலும் கால்நீட்டி நமஸ்காரம் பண்ணலாகாது.

102. ஆடவர்கள் என்ன நமஸ்காரம் பண்ணல் வேண்டும்?

அட்டாங்க நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

103. அட்டாங்க நமஸ்காரமாவது யாது?

தலை, கையிரண்டு, செவியிரண்டு, மேவாய், புயங்களிரண்டு என்னும் எட்டு அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

104. பெண்கள் என்ன நமஸ்காரம் பண்ணல் வேண்டும்?

பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

105. பஞ்சாங்க நமஸ்காரமாவது யாது?

தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்து அவயவமும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்

106. நமஸ்காரம் எத்தனை தரம் பண்ணல் வேண்டும்?

மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும் பண்ணல் வேண்டும். ஒரு தரம், இரு தரம் பண்ணுதல் குற்றம்.

107. நமஸ்காரம் பண்ணியபின் யாது செய்தல் வேண்டும்?

பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

108. எப்படிப் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு கைகளையுஞ் சிரசிலேனும் மார்பிலேனுங் குவித்து சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு, கால்களை மெல்ல வைத்துப் பிரதஷிணம் பண்ணல் வேண்டும்.

109. பிரதஷிணம் எத்தனை தரம் பண்ணல் வேண்டும்?

மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும் பண்ணல் வேண்டும்.

110. சுவாமி சந்நிதானங்களை எந்த முறையாகத் தரிசனஞ் செய்தல் வேண்டும்?

முன் விக்னேசுவரரைத் தரிசனஞ் செய்து, பின் சிவலிங்கப் பெருமானையும், உமாதேவியாரையுந் தரிசனஞ் செய்து, விபூதி வாங்கித் தரித்துக் கொண்டு, அதன் பின் சபாபதி, தஷிணாமூர்த்தி, சோமஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்தங்களை தரிசனஞ் செய்தல் வேண்டும்.

111. விக்னேசுவரரைத் தரிசிக்கும் பொழுது யாது செய்தல் வேண்டும்?

முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந் தெழுந்து கும்பிடல் வேண்டும்.

112. சந்நிதானங்களிலே தரிசனம் பண்ணும் பொழுதெல்லாம் யாது செய்தல் வேண்டும்?

இரண்டு கைகளையுஞ் சிரசிலாயினும் மார்பிலாயினுங் குவித்துக் கொண்டு, மனங்கசிந்துருகத் தோத்திரஞ் செய்தல் வேண்டும்.

113. எந்தக் காலத்தில் சுவாமி தரிசனஞ் செய்யலாகாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிஷேகம், நிவேதனம் முதலியவை நடக்கும் பொழுது தரிசனஞ் செய்யலாகாது.

114. அபிஷேக காலத்திலே பிரதக்ஷிண நமஸ்காரங்களும் பண்ணலாகாதா?

அப்பொழுது உட்பிரகாரத்திலே பண்ணலாகாது.

115. தரிசனம் முடிந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

சண்டேசுவரர் சந்நிதியை அடைந்து, கும்பிட்டு, மூன்று முறை கைகொட்டி, சிவதரிசன பலத்தைத் தரும் பொருட்டுப் பிரார்த்தித்தல் வேண்டும்.

116. சண்டேசுவர தரிசனத்தின் பின் யாது செய்தல் வேண்டும்?

சிவசந்நிதானத்தை அடைந்து, நமஸ்காரம் பண்ணி, இருந்து, ஸ்ரீ பஞ்சாசரத்தில் இயன்ற உருச்செபித்துக் கொண்டு எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.

117. நித்தியமும் நியமமாக ஆலய தரிசனஞ் செய்ய இயலாதவர்கள் யாது செய்தல் வேண்டும்?

சோமவாரம், மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சூரியசந்திரகிரகணங்கள், சிவராத்திரி, நவராத்திரி முதலிய புண்ணிய காலங்களிலாயினுந் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

118. திருக்கோயிலிலே செய்யத்தகாத குற்றங்கள் யாவை?

ஆசாரமில்லாது போதல், கால், கழுவாது போதல், எச்சிலுமிழ்தல், மலசலங்கழித்தல், மூக்குநீர் சிந்துதல், ஆசனத்திருத்தல், சயனித்தல், காலை நீட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருத்தல், மயிர் கோதி முடித்தல், சூதாடல், பாக்கு வெற்றிலையுண்ணல், சிரசிலே வஸ்திரம் தரித்துக் கொள்ளுதல், தோளிலே உத்தரியம் இட்டுக் கொள்ளுதல், சட்டையிட்டுக் கொள்ளுதல், பாதரக்ஷையிட்டுக் கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், வீண் வார்த்தை பேசுதல், சிரித்தல், சண்டையிடுதல், விளையாடுதல். சுவாமிக்கும் பலிபீடத்துக்குங் குறுக்கே போதல் முதலிலானவைகளாம்.

## திருச்சிற்றம்பலம்

## ஏழாவது

## தமிழ் வேதவியல

119. சைவசமயிகள் ஓதவேண்டிய தமிழ் வேதங்கள் எவை?

தேவாரம், திருவாசகம் என்னும் இரண்டுமாம்

120. தேவாரஞ் செய்தருளியவர் யாவர்?

திருஞானசம்பந்த மூர்த்திநாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் மூவர்.

121. திருவாசகஞ் செய்தருளியவர் யாவர்?

மாணிக்கவாசக சுவாமிகள்

122. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?

சோழ நாட்டில் உள்ள சீர்காழியிலே வைதிகப் பிராமண குலத்தில் திருவவதாரஞ் செய்தருளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

123. திருநாவுக்கரசு நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?

திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரிலே வேளாள குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்.

124. சுந்தரமூர்த்தி நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே சிவப்பிராமண குலத்தில் திருவவதாரஞ் செய்தருளினார்.

125. மாணிக்க வாசக சுவாமிகள் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?

பாண்டி நாட்டிலே உள்ள திருவாதவூரிலே அமாத்தியப் பிராமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்.

126. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் முதலிய நால்வரும் எவ்வாறு பெயர் பெறுவார்கள்?

சைவ சமயகுரவர்கள் எனப் பெயர் பெறுவார்கள்.

127. யாது காரணத்தினால் இவர்கள் சைவசமயக் குரவர்கள் எனப் குரவர்கள் பெயர் பெறுவார்கள்?

பல அற்புதங்களைக் கொண்டு சைவசமயமே மெய்ச்சமயம் என்று தாபித்தபடியினாலே சைவசமய எனப் பெயர் பெறுவார்கள்.

128. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரிடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை?

1. மூன்று வயதிலே உமாதேவியார் கறந்து பொற்கிண்ணத்தில் ஊட்டிய திருமுலைப்பாலை உண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சிவபெருமானிடத்தில் பொற்றாளமும், முத்துப் பல்லக்கும், முத்துச் சின்னமும், முத்துக்குடையும், முத்துபந்தரும், உலவாக்கிழியும், படிக்காசும் பெற்றது.

3. வேதாரணியத்திலே வேதங்களினாலே பூட்டப்பட்டுத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருப்பதிகத்தினாலே திறக்கப்பட்ட திருக்கதவு அடைக்கப் பாடியது.

4. பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கும்படி பாடினது.

5. பாண்டியனுக்குக் கூனையுங் சுரத்தையும் போக்கினது.

6. சமயர்களெதிரே தேவாரந் திருவேட்டை அக்கினியிலே போட்டுப் பச்சையாக எடுத்தது.

7. வைகையாற்றிலே திருவேட்டைப் போட்டு எதிரேறும் படி செய்தது.

8. புத்த நந்தியுடைய தலையிலே இடியிடிக்கச் செய்தது.

9. ஆற்றிலே தாமும் அடியார்களும் ஏறிய ஓடத்தை திருப்பதிகத்தினாலே கரை சேர்த்தது.

10. ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கினது.

11. விஷத்தினால் இறந்த செட்டியை உயிர்ப்பித்தது.

12. விஷத்தினால் இறந்த பெண்ணினுடைய எலும்பைப் பெண்ணாக்கினது.

13. தமது திருக்கல்யாணந்தரிசிக்க வந்தவர்கள் எல்லோரையுந் தம்மோடு அக்கினியிலே புகுவித்து முக்தியிலே சேர்த்தது.

129. திருநாவுக்கரசு நாயனாரிடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சமணர்களாலே ஏழு நாள் சுண்ணாம்பு அறையிலே பூட்டப்பட்டிருந்தும் வேவாது பிழைத்தது.

2. சமணர்கள் கொடுத்தநஞ்சுகலந்த சுண்ணாம்பு அறையிலே பூட்டப்பட்டிருந்தும் பாற்சோற்றை உண்டும் சாவாது பிழைத்தது.

3. சமணர்கள் விடுத்த யானையினால் வலஞ்செய்து வணங்கப்பட்டது.

4. சமணர்கள் கல்லிலே சேர்த்துக் கட்டிச் சமுத்திரத்தில் இடவும் இக்கல்லே தோணியாகக் கரையேறினது.

5. சிவபெருமானிடத்திலே படிக்காசு பெற்றது.

6. வேதாரணியத்திலே வேதங்களாலே பூட்டப்பட்ட திருக்கதவு திறக்கப்பாடினது.

7. விஷத்தினால் இறந்த பிராமணப் பிள்ளையை உயிர்ப்பித்தது.

8. காசிக்கு அப்பால் ஒரு தடாகத்தினுள்ளே முழுகித் திருவையாற்றில் ஒரு வாவியின் மேலே தோன்றிக் கரையேறினது.

130. சுந்தரமூர்த்தி நாயனாரிடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை?

1. செங்கற்கள் பொன்னாகப் பெற்றுக் கொண்டது.

2. சிவபெருமான் கொடுத்தருளிய பன்னீராயிரம் பொன்னை விருத்தாசலத்தில் உள்ள ஆற்றிலே போட்டுத் திருவாரூரில் உள்ள குளத்தில் எடுத்தது.

3. காவேரியாறு பிரிந்து வழிவிடச் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. முதலை விழுங்கிய பிராமணப் பிள்ளையை அம்முதலை வாயினின்றும் அழைத்துக் கொடுத்தது.

5. வெள்ளை யானையில் ஏறிக்கொண்டு திருக்கைலாசத்துக்கு எழுந்தருளினது.

131. மாணிக்கவாசகர சுவாமிகளிடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை?

1. சிவபெருமானே நரியைக் குதிரையாக்கி கொண்டு வரும்படிக்கும், மண்சுமந்து அடிபடும்படிக்கும் பெற்றுக் கொண்டது.

2. புத்தர்களைத் தருக்கத்தில் வென்று ஊமைகளாக்கிப் பின் ஊமை தீர்த்துச் சைவர்களாக்கியது.

3. பிறவி தொடுத்து ஊமையாய் இருந்த ஒரு பெண்ணை ஊமை தீர்த்துப் புத்தர்கள் வினாவிய வினாக்களுக்கு விடை சொல்லும்படி செய்தது.

4. தம்முடைய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் சிவபெருமானே எழுந்தருளி வந்து எழுதும்படி பெற்றுக் கொண்டது.

5. எல்லாருங் காணக் கனகசபையினுள்ளே புகுந்து சிவத்தோடு கலந்தது.

132. இந்த அற்புதங்களினாலே யாது விளங்குகின்றது?

சைவமசயமே மெய்ச்சமயம் என்பது நன்றாக விளங்குகின்றது.

133. தமிழ்வேதம் ஓதுவதற்கு யோக்கியர் யார்?

மதுபானமும் மாமிசபோசனமும் இல்லாதவராய் ஆசாரமுடையவராய், சிவதீட்சை பெற்றவராய் உள்ளவர்.

134. தமிழ் வேதத்தை எப்படி ஓதுதல் வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நன்றி நவிலல்


எமது குடும்பத் தலைவர் **திரு.அப்பாத்துரை செல்வராஜன்** அவர்கள் தேகவியோகமடைந்த செய்தி கேட்டு வந்து எமக்குப் பல வழிகளிலும் ஆறுதலும் ஆலோசனைகளும் கூறி, வேண்டியவாறு உதவிய நண்பர்கள், உற்றார், உறவினர்களுக்கும், மற்றும் தொலைபேசி வாயிலாகவும், கடிதங்கள், மின்னஞ்சல், Facebook, Geni ஆகியன மூலமாகவும் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக் கிரியையின் போது பங்குபற்றியவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்தவர்களுக்கும், மலர் தூவி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீரஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் எமது பெருமிழப்பின் மத்தியில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்


யாமா வளவு
தெல்லிப்பளை



# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"ஆத்மா பிறப்பதுமில்லை
ஒருமுறை பிறந்த பின்னர் இல்லாமல்
போவதுமில்லை.அது பிறப்பற்றது.
அவை தரமானது. சாஸ்வதன்
பழையோன். உடம்பு ஒழிக்கப்படும்
போதும் ஆத்மா
கொல்லப்படுவதுமில்லை"

"எவர் சதாகாலமும் என்னையே
நினைத்திருக்கின்றாரோ அவர்கள்
இறுதியில் என்னையே
அடைகின்றனர்"

- கீதோபதேசம்



[illegible] பிறிண்டேர்ஸ் இல.237, [illegible] TP:-0777164613

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org